உ

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்

# ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்

## மயிலம் - 604 304 & பொம்மையபாளையம் - 605 104

## விழுப்புரம் மாவட்டம்



**மயிலம் பொம்மபுர ஆதினம் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானங்கள்**

**20 ஆம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்**

**கந்தபுராணத்தில் வாழ்வியல் நெறி**

புராணம் என்னும் சொல்லுக்குப் பழையது என்று பொருள். தாய்ப்பறவை தன் வயிற்றில் பக்குவப்படுத்திய உணவுக்கு ஒப்பானவை புராணக்கதைகள் உடலில் தாய்ப்பால் பற்றுவதுபோல் எளிதாகப் புராணங்களின் வழி தத்துவஞானம் உள்ளத்தில் பதிகிறது.

**திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்**
**சகட சக்கரத் தாமரை நாயகன்**
**அகட சக்கர வின்மணி யாவுறை**
**விகட சக்கரன் மெய்பதம் போற்றுவாம் ( கந்தபுராணம் - காப்பு)**

என்ற காப்புச் செய்யுளோடு கந்தபுரணாம் துவங்குகின்றது. எண்ணுதற்கரிய புண்ணிய புராணமாகிய கந்தபுராணம் வேத உபநிடதங்களின் சாரத்தைத் தன்னகத்தே கொண்டு புராணங்களின் நாயகமாகத் திகழ்கிறது. பெருங்கடலாகத் திகழும் கந்தபுராணம் முருகப்பெருமானின் திருவிளையாடல்களைப் பற்றியதாகும். கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சிபுரத்து குமரக்கோட்டத்து முருகனை மெய்யன்போடு விதிமுறை வழுவாது பூசை செய்து வந்த காலத்தில் வடமொழியிலுள்ள ஸ்கந்த புராணத்தைத் தமிழில் அருளிச் செய்தார்.

வடமொழியிலுள்ள ஸ்கந்த புராணத்தின் சங்கரசங்கிதையில் சிவரகசிய கண்டத்தில் வரும் **1. சம்பவ காண்டம் 2. அசுர காண்டம் 3. மகேந்திர காண்டம் 4. யுத்த காண்டம் 5 தேவகாண்டம் 6. தட்சகாண்டம்** என்னும் முதலாறு காண்டங்களின் மொழிபெயர்ப்பே தமிழில் "கந்தபுராணம்" என வழங்கப்பெறுகின்றது. 6 காண்டங்களும் 141 படலங்களும் 10346 செய்யுட்களும் அமைந்த இந்நூல் முருகக் கடவுளுடைய திரு அவதாரம் முதல் வள்ளியம்மை திருமணம் வரை இனிய சரித்திரக் கதையாக, பலகிளைக்கதைகளுடன் கற்பவர்க்கு ஏற்றம்தரும் வகையில் அமைந்துள்ளது. பன்முகச் சிறப்புகளுடன் திகழும் கந்தபுராணத்தில் காணலாகும். வாழ்வியல் நெறிகளை இக்கட்டுரை மொழிகின்றது.

மக்களுடைய வாழ்வியலில் முதன்மை இடம் வகிப்பது கடவுள் வழிபாடு. உலகில் பிறப்பெடுத்த ஒவ்வொரு உயிரும் கடைத்தேறுவதற்கு வழிபாடே உகந்த நெறியாகும். **" திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை"** என்று சொல்லி வைத்தனர். முன்னோர். இயற்கையை வழிபடும்முறை

பழங்காலம் தொட்டு இன்று வரை நீடித்து வருகின்றது.

காலப்போக்கில் ஆறுவகையான சமயநெறிகளின்வழி இந்துக்களின் வழிபாடு **(சைவம், வைணம், சாக்தம், கௌமாரம், காணாபத்யம், சௌரம்)** அமைந்தது. இந்த ஆறு நெறிகளுள் கௌமார நெறியினர் முருகனை முழுமுதல் தெய்வமாக வணங்கினர்.

இதுமட்டுமன்றி தமிழ்க்கடவுள் முருகன் என்ற சிறப்புடன் **"முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன்"** எனும் நிலையில் தமிழோடு இணைந்து முருகனை வழிபடும் மரபும் மேலோங்கியது. அசுர சக்தியை வேரறுக்க வந்தவன் முருகன் என்பதைக் கச்சியப்ப சிவாச்சாரியார் பின்வரும் பாடலில் எடுத்துரைக்கின்றார்.

**"மறைகளின் முடிவால் வாக்கால மனத்தினால் அளக்கொணாமல்**
**நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமல மூர்த்தி**
**அறுமுக உருவாயத் தோன்றி அருளொடு சரணவத்தின்**
**வெறிகமழ் கமலப்போதின் விற்றிருந்து அருளினானே**
**- (கந்தபுராணம், உற்பத்திகாண்டம் 96)**

மாயைகளின் தன்மையினால் வலிமை பெற்று திருமால் உள்ளிட்ட அமரர்கள் அனைவரையும் வென்று 108 யுககாலம் 1008 அண்டங்களை ஆட்சி செய்த தன் உடலானது அழிவற்றதாகி அமரர்க்கு இன்னலை விளைவித்து வந்த தீயோனாகிய சூரபத்மன் என்ற அசுரர் தலைவனை வீழ்த்திய முருகப்பெருமானின் திருவடி மலர்களைக் கரம்குவித்து சிரம் தாழ்த்தி வணங்குவோம் எனக் கந்தபுராணம் கூறுகிறது. இதனை

**அமரர் இடர்தீர அமரம் புரிந்த**
**குமரன் அடி நெஞ்சேகுறி**

எனக் கந்தசஷ்டி கவசம், சுருங்கச்சொல்லி விளங்க வைக்கிறது.

அன்பே கடவுளின் வடிவம் என்று சமயங்கள் யாவும் எடுத்தியம்புகின்றன. அன்பே வடிவாகிய கடவுளை அறிவதற்கும், அவர் அருளைப் பெறுவதற்கும் பேரன்பின் முதிர்ச்சியாகிய பக்தியைக் கேடயமாக்கி இறையருளைப் பெறுபவரே பக்தரெனப்படுவர்.

**இந்தியாவில் மட்டுமின்றி அயல் நாடுகளிலும் முருக பக்தி மேலாங்கி நிற்கின்றது.** முருகனை வழிபடும் முறைமைகளை, முருகனது பெருமைகளை எடுத்தியம்பும் நூல்கள் பலவற்றனுள் கந்தபுராணத்திற்கும் என்றுமே தனித்த இடமுண்டு.

கடலில் மாமரவடிவில் நின்ற சூரபத்தமனை அழித்த முருகன் வெற்றி காண்பதாகக் கந்தபுராணம் கூறுகின்றது. இதனைப் படிக்கும்பொழுது சூரபத்மனைப் போன்ற தீமைகளை வெல்ல வேண்டுமெனில் முருகனைத் துணையாகக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மேலிடுகிறது. இந்த இறைநம்பிக்கை மக்களிடையே பக்திவளர உறுதுணை புரிகிறது.

கந்தபுராண அரங்கேற்றத்தின்போது கச்சியப்பர் முதல் பாடலைப் பாட அவையோர் அதற்கு மறுப்பு தெரிவித்த நிலையில், முருகப்பெருமானே நேரில் வந்து பாடலை விளக்கியதை அறிந்த அவையோர் கச்சியப்பரின் பத்தித் திறத்தைப் பாராட்டியதாகச் செய்தி உண்டு.

**மூவிருமுகங்கள் போற்றி! முகம்பொழி கருணை போற்றி!**
**ஏவரும் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி! காஞ்சி**

**மாவடிவைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னோன்**
**சேவலும்மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி**
**- (கந்தபுராணம், பாயிரம் 3)**

எனும் பாடலடிகளில் உலகத்து உயிர்களை இன்பத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்விக்கும் செவ்வேளாகிய முருகனின் அறுதிருமுகங்களையும், பன்னிருகரங்களையும் வேலையும் மயிலையும் போற்றி உய்வோம் எனப்பாடுகின்றார்.

முருகவழிபாடு தமிழகத்தில் தனித்த நெறியாகப் பரவியமைக்குக் காரணம், மக்களின் அன்றாட வாழ்வியலில் இரண்டறக் கலந்த ஒன்றாக இவ்வழிபாட்டு நெறி விளங்கியமையே ஆகும். ஆரம்ப காலத்தில் இயற்கையைக் கண்டு அஞ்சி வணங்கி வந்த மக்கள் இயற்கைக்கு உருவம் கொடுத்து குன்றின் உச்சியில் கோயிலை அமைத்துக் குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனிருக்கும் இடம் என்று வணங்கினர்.

ஆரம்பகாலத்தில் அசுரசக்தி தலைதூக்கினாலும், இறையருள் காலப்போக்கில் அசுரசம்பத்தை அழித்து மக்களைக்காக்கும் என்ற உண்மையை இதன்வழி உணரமுடிகிறது. **தருமத்தின் வாழ்வுதனைச் சூதுகவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும் என்ற மகாகவியின் வாக்கு** நினைவில் கொள்ளத்தக்கது.

இயற்கை விதியை வசீகரமான கதைகள் மற்றும் உபகதைகள் வாயிலாக மாந்தரின் உள்ளத்தில் பதியச் செய்யும் ஆற்றல் கந்த புராணத்திற்கு உண்டு. **" கந்தபுராணம் நம் சொந்தப்புராணம்"** என்பர் பெரியோர்.

**சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை**
**சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமுமில்லை**
**கலியின் கிலி போக்க கந்தனை எண்ணு**

எனும் பழமொழியின் வாயிலாகவும் முருகவழிபாடு பாமரமக்களிடமும் ஏற்றம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது. எனவேதான் கருப்பொருள்களுள் ஒன்றாகவும், முதன்மையாகவும் **"தெய்வம்"** எனும் சக்தி தொல்காப்பியரால் குறிப்பிடப்பெற்றுள்ளது. செய்யுளில் கூறப்பெறும் **"வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பு"** என்ற தொடரும் சிந்திக்கத்தக்கது.

இறைவனுக்காக மக்களா? மக்களுக்காக இறைவனா? என்றால் மக்களுக்காகத்தான் என்பது இந்துமதக் கொள்கை, பக்தர்களுக்காகப் பணிசெய்யும் சேவகன். அதுவும் வீடுதோறும் வந்து கதவைத்தட்டி அருள்பாலிக்கும் தொண்டன் என்று இந்துமதம் கூறுகிறது. (வாழ்வியல் நெறி ப. 123).

சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து உருவான தீப்பொறியைக் கண்டதும் உமாதேவி உள்ளிட்ட அனைவரும் அஞ்சி நடுங்கினர். கங்கை நதியில் விடப்பட்ட தீயானது இமயமலைச் சாரலில் சரவணப்பொய்கையில் சோதிப்பிழம்பாகத் தாமரையில் இருந்து சோதி ஆறுமுகங்களுடன் பன்னிரு கைகளுடன் அவதரித்தமையை

**"கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே**
**ஓர் திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய"**
**(கந்தபுராணம், உற்பத்திகாண்டம் 92)**

எனும் பாடல் எடுத்துரைக்கின்றது.


குமரன் அவதரித்ததும் ஆகாயத்துந்துபிகள் முழங்கின் தேவர்களும், முனிவர்களும் பூமழை பொழிந்தனர். உயிர்குலத்தின் இதயத்தில் மகிழ்ச்சி துளிர்த்தது சரவணப்பொய்கையில் செந்தாமரை மலர்மீது இனிதமர்ந்த **"சிறுகுழந்தைபோல"** அவதரித்தார் எனக் கந்தபுராணம் மொழிகின்றது.

தமிழக மக்களின் தொன்மை வழிபாடாகக் கருதப்பெற்ற இவ்வழிபாடு உலகமெங்கிலும் பரவியமைக்கும் காரணம் முற்பிறவியில் செய்த பாவங்கள் நீங்கும். புண்ணியம் பெறலாம், பிறவிப் பெருங்கடலைக் கடந்து பேரின்ப நிலையை எய்தலாம் என்பதே ஆகும். குமரக்கோட்டத்தில் உறையும் ஆறுமுகனின் திருவடியைப் போற்றிப் பணிவதே பின்வரும் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

**ஈறுசேர் பொழுதினும் இறுதி யின்றியெ**
**மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியில்**
**கூறுசீர் புனைத்தரு குமரக்கோட்டம் வாழ்**
**ஆறுமா முகப்பிரா னடிகள் போற்றுவாம்.**

**- (கந்தபுராணம் கடவுள் வாழ்த்து 18)**

வேதகங்களின் ஞானத்திற்கும், உபநிடதங்களின் ஞானத்திற்கும் அப்பாற்பட்டவர். காணுதற்கு அரியவர், புதியவர்க்குப் புதியவர், முதியவர்க்கு முதியவர், முடிவிற்கு முடிவாய், முதலுக்கு முதலாய், உயிர்க்கு உயிராய் நின்ற அமலனாகிய முருகனின் தாள்பணிந்து உய்வுபெறுவோம் எனக் கந்தபுராணம், வாழ்வியல் நெறிகளில் வழிபாட்டு நெறியே தலைசிறந்து என்பதையும், வழிபாட்டால் வாழ்வு வளம்பெறும் என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.




கயிலைமாமணி சுந்தரராச அடிகளார், திருமுருகன்பூண்டி திருப்பூர்

# கந்தபுராணமும் - வாழ்வியலும்



விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள்
மெய்மை குன்றா மொழிக்குத் துணை
முருகா எனும் நாமங்கள்
முன்பு செய்த பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும்
பயந்த தனி வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன்
மயூரமுமே!

மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
காஞ்சி மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றிஅ ன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி!

காஞ்சி மாநகரில் குமரக் கோட்டத்தில் பூசகராக இருந்த கச்சியப்ப சிவாச்சாரியார் இறைவனே உணர்த்திய வண்ணம் வியாச பகவான் வேதங்களில் அருளியதை தமிழில் எழுதியதே கந்த புராணம். கந்த புராணம் கயிலையில் சிவன், பார்வதி திருமணத்தில் தொடங்கி திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை திருமணமும், தொண்டை நாட்டு வள்ளி மலையில் வள்ளி திருமணத்திலும் முடிகிறது.

கந்தபுராணத்தின் மையக்கருவாக உள்ளது செய்த நன்றியை மறந்தது.

என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பிக்கின்றது. சைவசித்தாந்தத்தின் மெய்ப்பொருளை உணர்த்துகின்ற வண்ணம்

சூரபதுமனை ஆவண மலமாகவும்
சிங்கமுகனை கன்ம மலமாகவும்
தாரகாசூரனை மாயா மலமாகவும்
முருகன் கைவேல் ஞான வடிவமாகவும்

தோன்றுகிறது. இம் மும்மலங்களின் நீக்கமே கந்தபுராணமாக விளங்குகிறது.

காசிய முனிவரை தந்தையாகவும் மாயை என்கின்ற அசுர இனப்பெண்ணை தாயாகவும் கொண்டு பிறக்கின்ற குழந்தைகள்தான் இவர்கள். தமது குழந்தைகளுக்கு அறக்கல்வி போதிக்க விரும்பிய காசிய முனிவரை தடுத்து தம்குல குருவாகிய சுக்கிராச்சாரியாரிடம் தம் குழந்தைகளை கல்வி கற்க அனுப்பினார் தாய் மாயை. சுக்கிராச்சாரியார் அவர்களுக்கு

கல்வி, போர் வித்தைகளை கற்பித்து அவர்களை உலகம் முழுவதும் அடக்கியாள வைத்தார். பின் அவர்களுக்கு தவம் இயற்றச் சொல்லி கடும் தவம் மூலம் சிவபெருமானிடம் அளப்பரிய சக்தி மிக்க வரங்களை பெற்றனர். பின் சுக்கிராச்சாரியாரின் ஆலோசனையின் வண்ணம், தேவ லோகத்தின் மீது படையெடுத்து அவர்களை அடிமையாக்கினார்கள்.

"தீயரைக் காண்பதும் தீதே" என்ற அவ்வையின் வாக்கிற்கு இணங்க தேவர்கள் தச்சனுடைய யாகத்திற்குச் சென்றதும், அங்கு தட்சன் சிவபெருமானை நிந்தித்ததும் பின் தேவர்களை துன்பப்படுத்தியதையும் இன்றைய வாழ்வியலாக காட்டியுள்ளார்.

கடும் தவத்தால் பெற்ற வரத்தால் சிவபெருமான் தன்னைத்தவிர வேறு யாராலும் அழிவில்லை என்று சூரபதுமனுக்கு தந்த வரத்தால், தேவலோகம் சென்ற இந்திராதி தேவர்களையும் அடக்கி ஆண்டு கொடுமைப்படுத்திய காரணத்தால் தேவர்கள் முனிவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

"அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும்" என்ற அருணகிரியாரின் திருப்புகழுக்கு ஏற்ப இறைவன் தனது ஐந்து முகங்களை ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகியவற்றுடன் அதோமுகத்தையும் சேர்த்து ஆறுமுகமாக முருகப்பெருமானை அவதாரம் செய்ய வைத்தார். அப்படி வந்த முருகப் பெருமானிடம் கருணையே வடிவமான அன்னை வேல் வழங்கி சூரர்களை வதம் செய்ய ஆணையிட்டார்?

கந்தன் என்றால் பகைவருடைய ஆற்றலை வற்றச் செய்பவன் என்பது பொருள் ஆறு மேனிகளும் ஒன்றாக பொருந்தியவர் கந்து என்றால் வீட்டு விலங்குகள் கட்டிப் போடப்பட்டுள்ள கட்டுத்தறி என்ற பொருள். பதியானவர், பாச வினைகளால் பசுவாக கட்டிப் போடப்பட்டுள்ள உயிர்களை பாசவினை நீக்கி, இறையருள் பெற வைப்பவன் கந்தன் என இன்றைய உலகியலை அருளியுள்ளார்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணங்களில் முறையே ராமர் இராவணனை வதம் செய்தார். கண்ணன் கம்சனை வதம் செய்தார். மகாவிஷ்ணு இரணியனையும், கிருஷ்ணன் கௌரவர்களையும் வதம் செய்தார். ஆரம்பகாலத்தில் சூரபதுமனை வதம் செய்யாமல் தன் அறக்கருணையினால் சேவலாகவும் மயிலாகவும் அருள்செய்து தன்னுடன் வைத்துக்கொண்டார். ஆரம்பகாலத்தில் சூரபத்மனை கண்டு பயந்து வணங்கிய தேவர்கள் கந்தனுடைய அறக்கருணையால் முருகப்பெருமான் வாகனமான மயிலை வணங்கினார்கள். இறைவன் சூரபத்மனை, சேவலும் மயிலுமாகவும் சிங்கமுகனை அம்மைக்கு சிம்மவாகனமாகவும், தாருகா சூரனை தனக்கு யானை வாகனமாக மாற்றி அருட் கொடை அளித்தார். இதை சைவசித்தாந்தம் பதி பசு பாசம் என்கின்ற வகையில் பதியாகியா இறைவன் தன் அளப்பரும் கருணையால் உயிர்களுக்கு தான் வலியச் சென்று பேரானந்தம் தர வேண்டும் என்று கருணை செய்கிறார்.

இந்த உயிர்களாலும் (பசு) சடப்பொருட்களாலும் (பாசம்) இறைவனுக்கு எந்தவித பயனும் இல்லை. இறைவன் முழுக்கருணையையும் அனுபவிப்பது உயிர்கள் மட்டுமே என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்தி, இறைவன் நமக்குச் செய்யும் பெருங்கருணையை நினைவு கூர்ந்து இறைழிபாடு செய்து நமது துன்பங்களை நீக்கிக் கொள்வதே நமது வாழ்வியல். இக்கருணையை மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் "நாயிற்கடையாய் கிடந்த அடியேற்கு தாயில் சிறந்த தயவான தத்துவனே" என்று பாடியுள்ளார். இன்றும் இலங்கை வாழ் தமிழர்கள் கந்தபுராணத்தை பாராயணம் செய்து சுபித்து வாழ்கிறார்கள். பெண்கள் இந்திராணியின் மாங்கல்யத்தைக் காத்து இந்திரனுடன் சேர்த்து வைத்த கந்தன் கருணையை நினைத்து (தங்களுடைய மாங்கல்ய பலத்தை பாதுகாக்க) வழிபாடு செய்கிறார்கள் என்ற

செய்தியை திருமுருக கிருபானந்த வாரியார் சாமிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

முருகப் பெருமானின் முதன்மைத் தளபதி வீரபாகுத்தேவர் இப்போரில் தூதுவனாக சென்று சூரபத்மனிடம்

வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

என்ற குறட்பாவுக்கு ஏற்ப முருகப் பெருமானின் எண்ணற்ற கருணையை விளக்கிக் கூறியும், சூரபத்மன் ஏற்கவில்லை. இறுதியில் தனி ஆளாக நிற்கின்றபோது இதை எண்ணிப்பார்க்கிறான். தன் தாய் மாயையும் "பெருமான் நிகரற்றவர் அவரை சரண் அடை" என வேண்டியதையும் நினைத்துப் பார்க்கிறான். இறுதிப்போரில் எல்லா உருவங்களையும் எடுத்து போரிடும் அவனைத் தனிமைப்படுத்தி தன் விசுவரூபக் காட்சியை காட்டினார். இக் காட்சியைக் காண கந்தப்பெருமான் சூரனுக்கு "சூரிய ஞானக் கண்ணையும்" தந்தார். இக்காட்சியை கண்ட சூரன்

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாள் பரிசிலை உயர்த்திலேனேல்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தி அன்றோ?

பாலன் என்றிருந்தேன் ஆனால் மூல காரணமான இறைவனே வந்து அருளினார் சூரனுக்கு வேலும் மயிலுமாக முக்தி அருளினார்.

முருகப் பெருமான் வீரவாகுத் தேவரிடம் போரில் வென்ற, அவரின் பெருமையை சொல்லி என்ன வேண்டும் எனக் கேட்கும் போது,

"கோல நீடிய நதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திரன் அரசினை கனவிலும் வெ.்.கேன்
மாலயன் பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத்தன்பையே வேண்டுவேன் தமியேன்"

தேவர்கள் எல்லாம் சூழநின்று நோக்கும் போது முருகப்பெருமானிடம், வீரபாகு என்ன கேட்பாரோ தங்கள் பதவி போய்விடுமோ என பதைபதைத்து நிற்கும்போது வீரவாகுத்தேவர், உன் திருவடி அன்பையே வேண்டுவேன் என நின்ற பெருமையும், இறுதியில் தெய்வயானை வள்ளி திருமணத்துடன் நிறைவு பெறுகிறது.

கந்தபுராணம் முழுக்க வாழ்வியலை மையமாகக் கொண்டுள்ளதை வாரியார் சுவாமிகளும், கந்தர் கலி வெண்பாவில் குமரகுருபர சுவாமிகளும் சிறப்பாக பாடியுள்ளனர். நாமும் அதனை படித்து இறையருள் பெற்று பல்லாண்டு வாழ அடியேன் வழிபடுகடவுளாக திருமுருகன் பூண்டி திருமுருக நாதசுவாமியின் தண்ணார்ந்த திருவருளும் பேரூராதீனம் கயிலைக் குருமனிதவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் குருவருளும் பெற்று வாழ்வாங்கு வாழ வழிபாடு செய்வோம்.

அன்பன்

**தவத்திரு.சுந்தரராச அடிகளார்**

# கந்தபுராணம் காட்டும் வாழ்வியல் நெறிகள்

(டாக்டர் வே. சங்கரநாராயணன், சேலம், தமிழ்நாடு)

**முன்னுரை**

1100 ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சியில் வாழ்ந்த ஒரு அருளாளர் கச்சியப்ப சிவாச்சாரியார். 10 வயதிலேயே ஞானம் பெற்றவர். முருகப் பெருமான் இவரது கனவிலே ஒரு நாள் காட்சிதந்து வடமொழியில் வழங்கி வந்த ஸ்கந்தபுராணத்தை தமிழிலே மொழியாக்கம் செய்துதரும்படி பணித்தார். கச்சியப்பரும் அப்பணி ஏற்று, அனுதினமும் பாடல்களை இயற்றி தான் வாழ்ந்த காஞ்சிபுரத்தில், தான் தினமும் வழிபடும் குமரக்கோட்டத்தில் (தற்பொழுது காஞ்சிகாமாட்சி அம்மன் ஆலயத்திற்கும் காஞ்சி ஏகாம்பரரேஸ்வரர் ஆலயத்திற்கும் இடையில் ராஜவீதியில் அமைந்துள்ளது இத் திருக்கோயில்) கர்ப்பகிரகத்தில் மாலை நேரத்தில் வைத்து விட்டுச் சென்றுவிடுவார். மறுநாள் காலை அப்பாடல்கள் முருகப் பெருமானால் திருத்தம் செய்யப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருக்கும். தமிழ்க்கடவுளே தமிழ்த்திருத்தம் செய்து தமிழ் உலகிற்குத் தந்த தனிப்பெரும் நூல்தான் கந்தபுராணம். 11,345 பாடல்களைக் கொண்ட இந்த நூலை முதன்முதலாக அச்சிட்டவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் பெருமான். சில காண்டங்களுக்கு முதன்முதலாக உரை வகுத்தவர் யாழ்ப்பாணப் புலவர் திரு. சுப்ரமணிய சாஸ்திரியார். புராணமாக இருந்தாலும் பல்வேறு வாழ்வியல் நெறிகளைப் பட்டியலிடும் நூலாக இது இன்றளவும் விளங்குகிறது. தமிழர்களுக்கு தமிழ்க்கடவுளே வழங்கிய வாழ்வியல் சட்டப் புத்தகம் கந்தபுராணம். அதனால்தான் யாழ்ப்பாணத்தில் எந்த நூலுக்கும் இல்லாத பெரும் சிறப்பு கந்தபுராணத்திற்கு உண்டு.

**திருமணமுறைகள்**

பைந்தமிழ்த் திருமணச் சடங்குகள் குறித்தும் பல்வேறு கருத்து மாறுபாடுகள் படித்தவர்களிடையே கூட இருக்கிறது. சில நாடுகளில் தமிழ்த் திருமணம் நடத்துகிறார்கள். தமிழ் நாட்டிலும் கூட அத்தகைய திருமணங்கள் நடைபெறுகின்றன. அத்திருமணங்களில் அந்தணர்கள் அக்னி வளர்க்கும் நிகழ்வு, தாரைவார்த்துக் கொடுத்தல் போன்றவை நடைபெறுவதில்லை. அக்கினி வளர்த்தலும், வலம் வருதலும் தமிழ் மரபல்ல என்று அத்திருமணங்களை நடத்திவைக்கும் தமிழ்ப் பெரியார்களே கருதுகிறார்கள். பிரச்சாரமும் செய்கிறார்கள். எது சரி? என்பதை அறிந்து கொள்ள ஒரு சட்டப் புத்தகம் தேவை. கந்தபுராணம் அத்தகையதொரு சட்டப் புத்தகம். கந்தபுராணத்தில் தெய்வானை திருமணம், வள்ளி திருமணம், பார்வதி திருமணம் என மூன்று திருமணக் காட்சிகள் விவரிக்கப்படுகின்றன. அந்த மூன்று திருமணங்களிலுமே அக்னி வளர்த்தலும், அதை வலம் வருதலும், தாரைவார்த்துக் கொடுத்தலும் மரபுகளாகக் கூறப்பட்டுள்ளன. தமிழ்க் கடவுளுக்கே அப்படிப்பட்ட திருமணம் நடந்திருக்கும்போது நாமும் அதைத்தானே கடைப்பிடிக்கவேண்டும்? இது மாதிரியான வாழ்வியல் வழக்கங்கள் பற்றி ஐயப்பாடுகள் எழுமானால் அப்போது நம்மை வழிப்படுத்த உதவுவது கந்தபுராணமும், நமது சைவத்திருமுறைகளும்தான். அவைதான் மேன்மை கொள் சைவநீதிக்கான சட்டப்புத்தகங்கள்.

**ஆணவம் என்னும் அரக்கன்:**

ஆணவம் மும்மலங்களுள் வலியது. அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்காவிட்டால் ஆண்டவன் அருளை அடைய முடியாது. உலகில் வாழும் மக்கள் ஒருவருக்கொடுவர் இணக்கமான உறவு கொள்ளத்தடையாய் இருப்பதும் ஆணவமே ஆகும். ஆங்கிலத்தில் "ஈகோ" என்றழைக்கப்படும் இந்த ஆணவம்தான் உலகின் மிகப்பெரிய தீமையாகவும் உருவெடுத்துள்ளது. கந்தபுராணம்

ஆணவத்தால் ஏற்படும் இன்னல்களையும், இழிநிலைகளையும் எடுத்துக்காட்டி ஆணவம் கொள்ளுதல் கூடாது என அறிவுறுத்துகிறது. 1008 அண்டங்களையும் 108 யுகங்கள் ஆட்சிசெய்யும் வல்லமை பெற்ற சூரபன்மன் ஆணவத்தால் தான் அழிகிறான். வந்திருப்பது பரம்பொருள்தான் என்பதை உள்மனம் உணர்ந்து கொண்டாலும் ஆணவம் அவனை அடிபணியச் செய்யவிடாமல் தடுக்கிறது. அவன் அழிவிற்கும் காரணமாக அமைகிறது. அதேபோல தாரகாசுரன் திருமாலின் உருளையைத்தன் கழுத்தில் அணிந்திருப்பதால் தன்னை எதிர்ப்பவர்கள் எவரும் இல்லை என்ற ஆணவம் கொண்டிருந்தான். இறுதியில் முருகப்பெருமானின் வேற்படை மார்பைப் பிளக்க இறக்கின்றான். எனவே ஆணவம் கொள்ளுதல் மிகக் கொடிய செயலாகக் கந்தபுராணம் கண்டிக்கிறது.

**தொழிலுக்கேற்ற தகுதி:**

இன்றைய சூழலில் கல்வியும், அதனால் பெறும் பட்டங்களும் மட்டுமே மனிதர்களின் தகுதிப்பாடுகளாக அங்கீகரிக்கப்படுகின்றன. அந்த மனிதர்களே உயர் பதவிகளிலும் பணியமர்த்தப்படுகிறார்கள். கல்வி, அறிவைப் பெறுவதற்கான நுழை வாயிலே தவிர அதுவே அறிவாகிவிடாது. “ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'' என்ற பழமொழியும் இதனால்தான் எழுந்தது. ஊதியத்திற்காகக் கற்பித்தலும், மதிப்பெண்களுக்காகக் கற்றலுமான அவலச் சூழல் இன்று அதிகமாகிவிட்டது. தான் கற்ற கல்வியை நுணுகி ஆராய்ந்து புதிய, அறிவியல் பூர்வமான வழித்தடங்களை காணுகின்ற தேர் கல்வியே வாழ்வை திடப்படுத்தும். இதைத்தான் மகாகவி பாரதி “தேடு கல்வியிலாத ஊரினைத் தீயினுக்கு இரையாக்குவோம்” என்று பாடுகின்றான். தான் செய்கின்ற பணியில் பூரண ஞானம் ஒருவர் பெற்றிருத்தல் வேண்டும். நான்முகனிடம் முருகன் “உமது தொழில் என்ன?” என்று கேட்டார். நான்முகன் தான் படைப்புத்தொழில் செய்துவருவதாகவும், சிவபெருமான் சொல்லிக் கொடுத்தமறைகளை அறிந்தவன் என்றும் கூறினார். உடனே முருகப்பெருமான், நான்முகனிடம் “ரிக்” வேதத்தைக் கூறும்படி கேட்க, நான்முகன் ஓம் என ஆரம்பித்துக் கூறத் தொடங்கினார். அப்போது முருகன் ஓம் என்ற சொல்லின் பொருள் “யாது?” என வினவ, நான்முகன் பொருள் தெரியாது தவித்தார். “பிரணவத்தின் பொருள் தெரியாத நீ படைத்தல் தொழிலை எப்படிச்செய்வாய்?” எனக் கூறி நான்முகனை கந்தவெற்பில் இறைசெய்தார். ஒருவர் தாம் எத்தகைய தொழிலை மேற்கொண்டாலும் அதற்குத் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வாழ்வியல் நியதியை கந்தபுராணம் வலியுறுத்துகிறது. சட்டமே தெரியாத ஒருவர் சட்டத்துறையை நிர்வகிப்பதும், மருத்துவமே தெரியாத ஒருவர் மருத்துவத்துறையை நிர்வகிப்பதும் கல்வியைப் பற்றியே அறியாதவர்கள் கல்வித்துறை அமைச்சராவதும் அரசியல் நிகழ்த்திய அவலங்கள்.

**உருவு கண்டு எள்ளாமை:**

எவரையும் அவரது உருவத்தை வைத்து இகழ்தல் கூடாது. ஆற்றலும் அறிவும் உருவம் சம்பந்தப்பட்டது அல்ல.. குள்ளமுனியான அகத்தியர்தான் இமயம் வென்ற தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர். கடுகு சிறிதானாலும் காரம் போவதில்லை. சின்னஞ்சிறு உளிதான் மிகப்பெரிய மலைகளையே செதுக்கிச் சிற்பங்கள் ஆக்குகிறது. சின்ன அக்னிக்குஞ்சுதான் மிகப் பெரிய காட்டையே அழிக்கும் ஆற்றல் மிக்கது என்பார் பாரதியார். சூரபன்மன் முருகனைச் சிறுவன் என்று எண்ணித்தான் முதலில் ஏளனம் செய்தான்.

“காற்றிலே தள்ளுண்டு நெருப்பிலே ஆடுண்டு - கங்கை
ஆற்றிலே தாக்குண்டு சரவணம் புற்களை உண்டு
வேற்றுப் பேர் முலை உண்டு அழுதே விளையாடும்

நேற்றைப் பாலனையோ பரம்பொருள் என நினைத்தாய்?"
என சிங்கமுகனிடம் முருகப்பெருமானின் பிறப்பை எள்ளிநகையாடினார்கள்.

ஆனால் அவனே போர்க்களத்தில் முருகப்பெருமானின் திருக்கோலம் கண்டவுடன்

"கோல மா மஞ்ஞைதன்னில் குலவிய குமரன்தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்திலேன்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
ஓல காரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தியன்றோ"

என்று வியந்து முருகன் பாலனல்ல - பரம்பொருள் என்று உணருகின்றான். உருவு கண்டு எள்ளாமை வேண்டுமென்பதைக் கந்தபுராணம் இதன் மூலம் அறிவுறுத்துகிறது.

**காமம் கொள்ளாமை**

மக்கள் தம் வாழ்வில் வெறுத்தொதுக்க வேண்டியவற்றுள் ஒன்று காமம். காமம் மக்களை விலங்கு நிலைக்குத் தள்ளிவிடும். மேலும் இறையருளைப் பெறத்தடையாகவும் அமையும். எனவே காமம் கொள்ளுதல் கூடாது என்ற வாழ்வியல் நெறியை கந்தபுராணம் காட்டுகிறது. அவுணர்களின் அரசன் அசுரேந்திரனின் மகள் மாயை மாயங்கள் ஆற்றுபவள். அவுணர்குலம் தழைப்பதற்காக அழகான மங்கையாக உருவெடுத்து, காசிப முனிவரின் காமத்தைத்தூண்டி, அவருடன் கூடி அளவில்லாத அவுணர்களை உருவாக்க வேண்டும் என்ற சுக்கிராச்சாரியாரின் சதியினால் காசிப முனிவரிடம் செல்லுகிறாள். காமம் முனிவரையும் விடவில்லை. காமம் வந்தால் மனிதன் மிருகமாகி விடுகிறான். மாயையுடன் தேவன், சிங்கம், யானை, ஆடு, யாளி, புலி, குதிரை, பசு, பன்றி, கூளி, கரடி எனப் பல வடிவங்களில் புணர்ந்து 60,000 வெள்ளம் அவுணர்களைத் தோற்றுவிக்கிறார். பின்னர் மாலை முனிவரைப் பிரிந்து செல்கிறாள். வருத்தமுற்ற காசிபரிடம் நான்முகன் "கள்ளும் காமமும் உலகில் கொடியவைகள். கள் அறிவை அழிக்கும். காமம் பிறப்பு, வினை இரண்டையும் உருவாக்கும்" என அறிவுறுத்துகின்றான். முறையான இல்லற வாழ்வு பெருமைக்குரியது. இழிவான காமம் சிறுமைக்குரியது.

**நிறைவுரை**

கந்தபுராணம் முருகனின் வரலாற்றைத் தாண்டியும் பல வாழ்வியல் நெறிகளை சிறுசிறு கிளைக் கதைகள் மூலமாகத் தமிழ் மக்களிடம் விதைக்கிறது. புராணம் என்றே புளுகுமூட்டை எனப்புறம் தள்ளுவதை விட்டு விட்டு, வாழ்வோடு பொருத்திப் பார்க்கும் அம்சங்கள் குறித்து ஆராய வேண்டும். அதை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லவேண்டும். இடைப்பட்ட அரைநூற்றாண்டு காலத்தில் கந்தபுராண ஆய்வுகளும், அரங்குகளும் அருகிப்போய்விட்ட சூழலில், இன்று பிரித்தானியத் திருக்கோயில்கள் ஒன்றியம் கந்தபுராணக் கருத்துக்களை மக்களிடம் விதைக்கும் மகத்தான பணியை மாநாடு மூலமாகவும், மலர் வெளியீடு மூலமாகவும், முன்னெடுத்திருப்பது மகிழ்ச்சி தருகிறது. தொடரட்டும் நற்பணிகள்! வாழ்த்துக்கள்!

**வே. சங்கரநாராயணன்**

# கந்தபுராணமும் யாழ்ப்பாணத்து உரைமரபும்

**செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்**

பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை
யாழ்ப்பாணம்.



**யாழ்ப்பாணக் கலாசார மூலம்**

"யாழ்ப்பாணக் கலாசார மூலம் கந்தபுராணம்" என்பது பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் பிரபலமான கூற்று. சில பெண்கள் பிறந்தகத்தைக் காட்டிலும் புகுந்தகத்தில் வாழ்வு பெறுவதைப் போல கந்தபுராணமும் தமிழகத்தில் காஞ்சியில் பிறந்திருந்தாலும் யாழ்ப்பாணத்திலேயே வாழ்வு பெற்றது எனப் பண்டிதமணி குறிப்பிடுவார். இதனால் இன்று ஐரோப்பிய நாடுகள் வரை பேசப்படும் பேறுற்ற புராணமாகக் கந்தபுராணம் திகழ்கின்றது.

புராணம் என்ற சொல்லுக்குப் பழைமை என்பது பொருள். எது தொன்று தொட்டு இன்று வரை பரவி இருக்கின்றதோ அதுவே புராணம் என்று வாயு புராணம் கூறும்.

பிரசங்க மரபு செல்வாக்குப் பெறுவதற்கு முன்னர் சமயச் செய்திகளை உரைக்கவல்ல ஊடகமாகப் புராண படனமே திகழ்ந்தது. புராணத்தை ஒருவர் இசையோடு வாசிக்க, இன்னொருவர் இசையோடு பொருள் விரித்து உரைக்கும் இரசனை மரபே புராண படனத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

**கல்வியை வழங்கிய கந்தபுராணம்**

இலங்கையில் பெண் கல்வியின் தோற்றுவாயாகவும் புராணபடன மரபையே கொள்வர். கோவில் சூழலில் பலரும் கல்வி அறிவைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பைப் புராணபடனம் ஏற்படுத்தியிருந்தது. இதனால் புராணப்படிப்பு என்று இதனைப் பெருமைப்படுத்தும் வழக்கமும் காணப்பட்டது.

இலங்கையில் புராண படன மரபில் புராணத்தைப் படித்து உரை கூறும் நிலை பிரதானமானது இதைவிட சித்திரபுத்திரனார் கதை, கண்ணகி வழக்குரை, பிள்ளையார் கதை என வாசிக்கும் மரபு ஒன்றும் உள்ளது. புராணம் படித்து உரை செய்யப்படும் நூல்களாகக் கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், திருவிளையாடற் புராணம், திருச்செந்தூர்ப் புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் என்பன விளங்குகின்றன.

இவற்றுள் கந்தபுராணமே முக்கியமானதாகும். பெரும்பாலான கோவில்களிலும் மடங்களிலும் கந்தபுராணமே படிக்கப்பட்டது. கந்தபுராணத்தை படித்த மடம் ஆதலால் கந்தர்மடம் என ஓர் ஊர் பெயர் பெற்றது. நீர்வேலியில் புலமையாளர்களால் கந்தபுராணம் படிக்கப்பட்ட கொட்டிலே இன்றுள்ள முருகையன் கோவில் ஆகும்.

**இலங்கையில் கந்தபுராணம்**

பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பாடு இலங்கைக்குக் கச்சிக் கணேசையர் என்பவரால் கந்தபுராணம் கொண்டு வரப்பட்டு படிக்கப்பட்டதாக இரா. வை. கனகரத்தினம் குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாணம் அரியாலை நீர்நொச்சித்தாழ்வுப் பிள்ளையார் கோவிலிலேயே இந்த நிகழ்வு நடந்தது

என்கின்றனர். நாவலராலும் அவரது மருகர் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளையாலும் கந்தபுராண இரசனை மரபு யாழ்ப்பாணத்தில் வளர்த்தெடுக்கப்பட்டது. நல்லூரை மையப்படுத்தி இந்த இரசனை மரபை அவர்கள் வளர்த்தெடுத்தனர் இதனால் யாழ்ப்பாணத்தாரின் வாழ்வியலில் கந்தபுராணம் பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் என்று கூறும் அளவிற்கு இதன் பெருமை நிலைபெற்றது.

கந்தபுராணம் படிக்கப்படும் ஏட்டினை ஒரு புனிதப் பொருளாகக் கடவுள் நிலையில் வைத்து வழிபடும் பண்பும் காணப்பட்டது. இதனால் வீடுகளில் சுவாமி அறையில் கந்தபுராண ஏட்டினை வைத்து வழிபடுவதையும் நம்மவர்கள் தெய்வீகத் தன்மையாகக் கருதினர்.

கந்தபுராணத்தை வெவ்வேறு காலப்பகுதிகளில் படிக்கும் மரபு காணப்படுகின்றது. பெரும்பாலும் தை பூசத்தில் ஆரம்பித்து பங்குனி உத்தரத்தில் அல்லது வைகாசி விசாகத்தில் முடியுமாறு படிக்கப்படுவதே வழக்கம். கந்த சஷ்டியுடன் நிறைவுறுமாறு படிக்கப்படும் வழக்கமும் காணப்படுகின்றது.

## கந்தபுராணத்திற்கு உரை கூறும் பாரம்பரியம்

இவ்வாறு பக்திமைக்குரிய பண்புகளைக் கந்தபுராணம் வளர்த்த அதே நேரம் தமிழ் உரை நடை வளர்ச்சியில் உரை எழுதும் பாரம்பரியம் ஒன்றையும் கந்தபுராணம் நம்மண்ணில் விதைத்திருக்கின்றது. புராணப் படிப்புப் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றமையால் தேர்ச்சி மிக்க பௌராணிகர்கள் நம்மண்ணில் உருவாகினர். இவர்கள் தமக்கென்றோர் உரைப்பாணியையும் வகுத்தனர். இது பெரும்பாலும் இரசனை மரபை ஒட்டியதாகவே அமைந்தது. இவ்வுரைகாரர் உரை நூல்களை ஆக்கி இலங்கையின் உரைநடைப் பாரம்பரியத்திற்கு வலுச்சேர்த்தனர். இதுபற்றிப் பேராசிரியர் எஸ் சிவலிங்கராஜா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"ஈழத்து உரை மரபில் புராணபடனம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. புராணபடனகாரரின் உரைக் குறிப்புக்கள் அச்சிடப்படாமல் இன்றும் ஈழத்தின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. ஈழத்து உரையாசிரியர் பாரம்பரியத்தில் புராணபடனம் ஆழமான செல்வாக்கினைச் செலுத்துகின்றது என்று திடமாக நம்பலாம்" என்கின்றார்.

தமிழ் உரை மரபு வாய்மொழி மரபாகவே காணப்பட்டிருக்கின்றது. உரை மரபு தோன்றி நீண்டகாலத்திற்குப் பின்னரே அது எழுத்துருப் பெற்றிருக்க வேண்டும். தமிழ் நூல்களுள் காலத்தில் முந்திய உரை நூலாகக் கொள்ளப்படுவது இறையனார் களவியல் உரை ஆகும். ஆனால் இலங்கையின் முதல் தமிழ் உரை நூல் எப்போது எழுந்தது என்பது குறித்து உறுதியான ஆதாரங்கள் காணப்படுமாறில்லை. பேராசிரியர் சி. சிவலிங்கராஜாவின் கருத்துப்படி ஈழத்தவரான சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ் நாடு சென்று அங்கே இருந்து கல்வி பயின்று சிவஞான சித்தியார் சுபக்கதிற்குக் கண்ட உரையையே இலங்கையரின் முதலாவது உரை நூலாகக் கொள்ள வேண்டும்.

## உரைகளில் பலவகை

இலங்கையில் புராணம் ஒன்றிற்காக எழுந்த பெரும்பாலான உரை நூல்கள் கந்தபுராணத்திற்காகவே எழுந்தன. பயன் சொல்வதில் வித்துவத்தன்மை மெய்ப்பிக்கப்பட்டமையால் உரைகாரரும் தமது உரையில் பல புதுமைகளைப் புகுத்தினர் இதனால் ஒன்றிற்கும் மேற்பட்ட உரை நூல்கள் எழுந்தன. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படலத்திற்கு விருத்தியுரை கூறும் உரையாசிரியர்களை விளித்து கந்தபுராண வியாக்கியானம்

என்று நீண்டதொரு கண்டனத்தை எழுதியுள்ளார். இது கந்தபுராண உரை மரபின் செல்வாக்கை உணர்த்துவதாக உள்ளது.

பாடலுக்கு உரை எழுதும் போது தொடக்ககாலத்தில் அரும்பதவுரை, குறிப்புரை என்பவற்றையே அமைத்தனர். இவை தெரியாத சொற்களுக்கு பொருள் உணர்த்துவதாக அமையும். ஆனால் விருத்தியுரையே உரையாசிரியரின் திறமையை வெளிக்கொணரும் தன்மையைக் கொண்டிருக்கும். விருத்தியுரை ஒன்று – கருத்து, பதப்பொருள், எடுத்துக்காட்டு, அந்த இடத்துக்கு வேண்டிய தன் உரையால் அமைந்த விளக்கம், பிறநூல்கள் கூறும் விளக்கம் என்பவற்றைக் கொண்டமையும். இலங்கையில் எழுந்த கந்தபுராண விளக்கவுரைகள் பெரும்பாலும் ஒரே தன்மை படைத்தனவாகவே காணப்படுகின்றன. இலக்கணக் குறிப்புக்கள், சொற்பொருள் விளக்கம், மேற்கோள் காட்டுதல், சமய தத்துவ விளக்கம், உரை முரண் சுட்டுதல் எனபவற்றில் அவை பொதுத்தன்மையைக் கொண்டிருப்பதாகப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா சுட்டுகின்றார்.

இந்தியாவில் கந்தபுராணத்திற்கு உரைவகுத்தோர் மிகச் சிலரே. தமிழ்நாட்டைச் சேர்ந்த ம.தி. பானுகவி என்பவர் கந்தபுராணம் முழுவதற்கும் (1907) உரை எழுதியுள்ளார். இதைவிட வடிவேலு முதலியார் கந்தபுராணம் அசுர காண்டம், உற்பத்தி காண்டம் என்பவற்றிற்கு பொழிப்புரை எழுதியுள்ளார். இது விருத்தியுரைப் பாங்கிலும் அமைந்துள்ளது. பேராசிரியர் சி. சிவலிங்கராஜாவின் கூற்றின்பிரகாரம் பானுகவி, வடிவேலு முதலியார் என்போரைத் தவிரக் கந்தபுராணத்திற்கு தமிழகத்தார் யாரும் உரை கண்டதாகத் தெரியவில்லை.

**ஈழத்தவர் உரைகள்**

சுப்பிரமணிய சாஸ்திரி அவர்கள் பருத்தித்துறையைச் சார்ந்த தும்பளைக் கிராமத்தவர். வடமொழியிலும் தமிழ்மொழியிலும் மிகுந்த பாண்டித்தியம் உடையவர். கலாநிதி யந்திரசாலையை நிறுவி பல நூல்களை வெளியிட்டார். அச்சக வசதியும் கந்தபுராணம் குறித்த ஆழ்ந்த அறிவும் கைவரப்பெற்றமையால் உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திரகாண்டம், யுத்த காண்டத்தின் ஒரு பகுதி என்பவற்றிற்கு உரை எழுதியுள்ளார். இவரது உரை பதவுரை, விரிவுரை என்றவாறாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கா.சிவசிதம்பர ஐயர், மகேந்திர காண்டத்திற்கு உரை எழுதியுள்ளார். இவ்வுரை சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரால் பரிசோதிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டதாகும். பதவுரையையே ஆக்கியுள்ளார். நூலின் தலைப்பில் மகேந்திரகாண்டம் மூலமும் பிரம்மஸ்ரீ சிவசிதம்பர ஐயரவர்கள் இயற்றிய பதவுரையும் என்றே குறித்துள்ளார். ஆயினும் பதவுரையுடன் இலக்கணக் குறிப்புக்களையும் நூலில் தந்துள்ளார்.

கார்த்திகேசு யோகி யாழ்ப்பாணம் சுழிபுரத்தைச் சேர்ந்தவர். புராணபடனம் செய்வதைத் தொழில் முறையாகக் கொண்டவர் என்பர். தமது முயற்சியால் புராணப் பயிற்சி உடையராகி நல்ல குரல்வளத்துடன் உரை கூறியுள்ளார். அந்த அனுபவத்துடன் யுத்த காண்டத்தின் சிங்கமுகாசுரன் வதைப்படலம் தொடங்கி மீட்சிப் படலம் வரையுள்ள ஐந்து படலங்களுக்கும் தெய்வயானையம்மை திருமணப்படலம், வள்ளியம்மை திருமணப் படலம் என்பவற்றிற்கும் உரை எழுதியுள்ளார். இவரது உரையில் பதவுரை, பொழிப்புரை, இலக்கணக் குறிப்பு என்பன காணப்படுகின்றன.

கந்தபுராணம் முழுவதற்கும் உரை எழுதி அதனை நூலாக வெளியிட்ட ஒரே ஒருவர் என்ற

பெயரைப் பெறும் யாழ்ப்பாணத்தவர் - வை. நல்லையா என்பவர் ஆவார் இவர் உயரப்புலம் கொக்குவிலைச் சேர்ந்தவர். நீண்டகாலம் கந்தபுராணத்திற்கு உரை சொல்லிய அனுபவத்தைக் கொண்டு முழுப்பாடல்களுக்கும் உரை எழுதி அதனை நூலாக வெளியிட்டார். இவ்வுரை சிறிய பொழிப்புரையாகவே அமைந்துள்ளது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மட்டுவிலைச் சேர்ந்தவர். திருநெல்வேலியில் இருந்த சைவ ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர். இவர் கந்தபுராணம் தட்ச காண்டத்திற்கு உரை எழுதியுள்ளார். இவ்வுரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட சிறப்பிற்கு உரியது. இவ்வுரையை எழுதுவதற்கு முன்னர் கந்தபுராண கலாசாரம் கந்தபுராண போதனை முதலிய கந்தபுராணத்துடன் தொடர்புடைய இரசனை நூல்களை எழுதியுள்ளார். இவரது கந்தபுராண உரை பதவுரை விரிவுரை என்றவாறு அமைந்துள்ளது. கந்தபுராணத்திற்கு வெளிவந்த உரை நூல்களுள் மெச்சத்தக்க நூலாக இந்நூலைக் கொள்வர். ஆனால் துரதிஷ்ட வசமாக ஏனைய காண்டங்களுக்குப் பண்டிதமணி உரையெழுதவில்லை.

வல்வை ச.வயித்தியலிங்கபிள்ளை, யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். இயற்றமிழ்ப் போதகாசிரியர் என்ற பெயரால் சிறப்பிக்கப்படுபவர். இவர் கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலம், , தெய்வயானையம்மை திருமணப்படலம், அண்டகோசப்படலம், சூரபன்மன் வதைப்படலம் ஆகிய உரை நூல்களைத் தனித்தனியாக வெளியிட்டார். இவ்வுரைகளை பதவுரை, விரிவுரை என்னும் அமைப்பில் வெளியிட்டுள்ளார்.

உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், வள்ளியம்மை திருமணப்படலத்திற்கு உரை எழுதியுள்ளார். இவ்வுரையும் பதவுரை, விரிவுரை என்ற அமைப்பிலேயே உள்ளது. இவரது விரிவுரையும் இலக்கணக் குறிப்புக்கள், சொற்பொருள் உரைத்தல், அகப்பொருள் விளக்கம், மேற்கோள்காட்டுதல் ஆகிய அம்சங்களைக் கொண்டதாக உள்ளது.

யாழ்ப்பாணம் மேலைப்புலோலி ஸ்ரீமத் வே. சிதம்பரப்பிள்ளை, யுத்தகாண்டத்தில் உள்ள சூரபன்மன் வதைப்படலத்திற்கு அழகான விரிவுரை ஒன்றை எழுதியுள்ளார். இவர் தனது பதின்மூன்றாவது வயதில் கண்பார்வையை இழந்தவர் என்பவர். ஆர்வ மிகுதியால் புராணம் படிக்கும் இடங்களில் போய் இருந்து கேட்டுத் தனது அறிவை வளர்த்துக்கொண்டார். இதனால் உரை நூலை ஆக்கும் வல்லமை பெற்றார். இவ்வுரை பதவுரை, விரிவுரை என்றவாறு அமைந்துள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம், கந்தபுராணம் சூரபன்மன் வதைப்படலத்திற்கு உரை எழுதியுள்ளார் (1992) இந்நூலை மேலல்வையூர் ஆ. பொன்னையா வெளியிட்டுள்ளதாக குறிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியைச் சேர்ந்த பண்டிதர் சு.கணபதிப்பிள்ளை யுத்தகாண்டத்திற்கு உரை எழுதியுள்ளார். இந்நூல் சைவத்தமிழ் நூல் வெளியீட்டுக் கழக வெளியீடாக அமைந்துள்ளது. நூலானது யுத்த காண்டம் முழுவதையும் வெளிப்படுத்தாவிடினும் பானுகோபன் வதைப்படலம் வரை அமைந்துள்ளது. பதவுரை, விளக்கவுரை என்றவாறு இவரது உரை அமைந்துள்ளது.

வடமராட்சி நாகர்கோவிலைச் சேர்ந்த ஓய்வுபெற்ற நிர்வாக சேவை உத்தியோகத்தர் பசுபதி, யுத்தகாண்டம் மீட்சிப்படலத்திற்கு உரை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கந்தபுராணப் படிப்பு முக்கியத்துவம் பெற்று விளங்கிய காரணத்தால் அதற்காக

எழுந்த உரை நூல்களும் அதிகமாக உள்ளன. இவ்வுரை நூல்களுள் பெரும்பாலானவை வடமராட்சிப் பிரதேசத்தில் எழுந்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இரசனை மரபை முன்னிறுத்துவதற்காக தட்ச காண்டத்திற்கு உரை எழுதினார். பெரும்பாலான உரைகள் யுத்த காண்டத்திற்கு எழுந்துள்ளன. இதிலும் சூரபன்மன் வதைப்படலத்தை முன்னிலைப்படுத்தியுள்ளன. கந்தசஷ்டி விரத காலத்தில் சூரபன்மன் வதைப்படலம் ஆலயங்களில் படிக்கப்படும். இதனால் இந்தப்படலத்திற்கு எழுந்துள்ள உரைகள் அதிகமாக உள்ளன. கந்தபுராணத்திற்காக எழுதப்பட்ட உரைகள் பதிப்பிக்கப்படாத நிலையில் இருக்கின்றமையையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். உரை கூறும் வல்லுநர்கள் ஆர்வ மிகுதியால் உரைகளை எழுத்துருவில் ஆக்கி வைத்துள்ளனர். அவை அச்சுவாகனம் ஏற வேண்டுமாயின் மிகுந்த பொருட்செலவு ஏற்படும் என்று அஞ்சி அவை எழுத்துருவிலேயே இன்றும் சிலரால் பேணப்படுகின்றன.

**உரைநடை நூல்கள்**

இவற்றைவிடக் கந்தபுராணத்தை உரைநடையில் மாத்திரம் பதிப்பித்தவர்களும் உள்ளனர். கந்தபுராண வசனம் என்ற பெயரில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதன்முதலாக நூலைப் பதிப்பித்தார். இந்நூல் அண்மையில் இலங்கை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் மீளப்பதிப்பிக்கப்பட்டது. இலங்கையின் சில ஆலயங்களில் கந்தசட்டி காலங்களில் இந்த உரைநடை நூல் வாசிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இதைவிடப் பல உரைநடையை மாத்திரம் வெளிப்படுத்தும் நூல்கள் எழுந்துள்ளன. அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர் கந்தபுராண வசனகாவியம் என்ற நூலை வெளியிட்டுள்ளார். சி. கணேசலிங்கக் குருக்கள், தெல்லிப்பளை பாலர் ஞானோதய சபை வெளியீடாக கந்தபுராண வசனச் சுருக்கம் என்ற நூலை வெளியிட்டுள்ளார். வட்டுக்கோட்டை க. குருமூர்த்தி ஐயர் கந்தபுராணச் சுருக்கம் என்ற நூலை வெளியிட்டுள்ளார். மட்டுவில் ஆ, நடராசா, கந்தபுராணச் சிந்தனைகள் என்ற பெயரில் கந்தபுராணக் கதையை உரைநடையில் எழுதியுள்ளார். மாதகல் வித்துவான் பொன் கந்தசாமி, கந்தபுராணக் கதையமுதம் என்ற பெயரில் உரைநடை நூல் ஒன்றை ஆக்கி வெளியிட்டுள்ளார்.

**நிறைவுரை**

கந்தபுராணத்திற்கு யாழ்ப்பாணத்தவர்களிடையே இருந்த செல்வாக்கின் காரணமாகவே அதிகளவான உரை நூல்களும் உரைநடை நூல்களும் எழுந்துள்ளமையைக் காண முடிகின்றது. யாழ்ப்பாணத்தில் பெருஞ்செல்வாக்குடன் இன்றும் அனுட்டிக்கப்படும் விரதமாகக் கந்தசட்டி விரதம் காணப்படுகின்றது. இக்காலத்தில் கந்தபுராணக் கதையைக் கேட்டல் அல்லது புராணபடனத்தில் பங்கேற்றல் விரத நியமங்களுள் ஒன்றாகக் கொண்டிருக்கின்றனர். இத்தேவையை நிறைவேற்றுவதற்காக அதிகளவான உரை மற்றும் உரைநடை நூல்கள் வெளிவந்துள்ளன.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற (2018) முருகபக்தி மாநாட்டின் போது அதிகளவு உரை நூல்கள் மீளப்பதிப்பிக்கப்பட்டன. இது பாராட்டிற்குரியது. ஆயினும். ஒருமுறைதானும் பதிப்பிக்கப்படாது வெறும் தாள்களில் கைகளால் எழுதப்பட்டுள்ள உரை முயற்சிகள் அச்சுவாகனம் ஏறக்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். கந்தபுராணத்தைப் படிப்பவர், கேட்பவர் என இதன் இரசனை மரபு அருகிவிட்டாலும் இலங்கைத் தமிழ் மண்ணின் அடையாளம் என்ற வகையில் கந்தபுராணத்தையும் அதன் உரை நூல்களையும் பேணிப்பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை மண்ணுடன் தொடர்புடைய அனைவரதும் கடனாக உள்ளது.

லண்டனில் வருடாந்தோரும் சைவதிருக்கோவில் ஒன்றியம் நடத்தும் சைவமாநாடு இவ்வாண்டும் மிகவும் சிறப்பாக நடைபெற திருவருள்கூடியுள்ளதை நினைத்து மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது இவ்வருடம் மிகச்சிறந்த சிந்தனையாளர்களோடு இந்த மாநாடு நடைபெறுவது மட்றற்ற மகிகிழ்வை தருகிறது உமையொரு பாகனின் திருவருளோடு இந்த சைவமாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற பிரார்த்திகிறோம்

# மஹா பிரதோஷ மகிமை.

தென்நாடுடைய சிவனே போற்றி !

என்னாட்டவருக்கும் இறைவா போற்றி !!

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

திருமூலர் .....

நமது சமயத்தில் முதற் தெய்வமாகிய சிவபெருமானை நாம் பல வழிகளில் போற்றி வணங்குகிறோம், சிவ வழிபாட்டில் பிரதோஷ விரத வழிபாடு சிறப்பானதாகும். இந்த பிரதோஷ வரலாற்றையும், வழிபாட்டையும் எவ்விதமாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று சற்று சிந்திப்போம்.

காலை வேளையை "" உஷா ""எனப்படும், உஷத்காலம் ஆகும். மாலை வேளையை ""தோஷா"" என்று அழைக்கிறோம். மாலை வேளையை ""தோஷா காலம்"" என்று அழைக்கிறோம், இதிலும் பிரதோஷ காலம் என்பது, சிவ வழிபாட்டிற்கே உரிய காலம் ஆதலால் அவ்வேளையை, ""மேலான காலம்"" என்ற பொருளில், ""பிரதோஷா"" என்றும் ""பிரதோஷம்"" என்றும் அழைக்கிறோம் .

முன்பு ஒரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் சிலபல காரணங்களால் போர் செய்தார்கள், இருபக்கமும் பேர் இழப்புக்கள் ஏற்ப்பட்டது. இதனை தவிர்க்கும் முறையை பற்றி யோசிக்கும் பொழுது, மஹா விஷ்ணு பாற்கடலை கடைந்தோம் என்றால் அதில் இருந்து, ""அமிர்தம்"" கிடைக்கும், அதனை யார் அருந்துகிறார்களோ அவர்கள் சாகா வரத்தை அடைவார்கள் என்று தெரிவிக்கிறார். அதனை ஏற்றுக் கொண்ட தேவர்களும், அசுரர்களும் மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பை கயிறாகவும் கொண்டு, தேவர்கள் வால் பகுதியிலும், அசுரர்கள் தலை பகுதியிலும் இருந்து பாற்கடலை கடைகிறார்கள். அப்போது பாற்கடலில் ""ஹாலம்"" என்னும் விஷம் தோன்றுகிறது, அப்பொழுது வாசுகி பாம்பும் மூர்ச்சையாகி ""ஆலம்"" என்னும் விஷத்தை கக்குகிறது. இரண்டு விஷங்களும் சேர்த்து ""ஆல ஹாலமாக"" மாரி தேவ, அசுரர்களை துரத்த இதனை கண்ட தேவர்களும், அசுரர்களும் செய்வதறியாது சிவபெருமான் இருக்கும் கைலாயம் நோக்கி ஓடினார்கள் விஷமும் விடாமல் துரத்த, கைலை மலையை வலமாகவும், இடமாகவும் பலமுறை சுற்றினார்கள். பின் சிவபெருமானை கண்டு, விஷத்தின் உக்கிரத்தால் அஞ்சி நடுங்கியவாறு நின்று கொண்டு, இறைவா இந்த விஷத்தினை விட்டு விட்டால் இவ்விஷம் உலகையே அழித்து விடும். ஆதலால் தாங்களே உகந்த வழிசெய்ய வேண்டும் என்று வேதனையுடன் விண்ணப்பித்தனர். அதனை கேட்ட சிவபெருமான்

அருகில் இருந்த சுந்தரை அழைத்து அந்த ""ஆலஹால"" விஷத்தை இவ்விடத்திற்க்கு கொண்டு வர ஆணையிடுகிறார். சுந்தரரும் சென்று அவ்விஷத்தை நாவல் கனி போல் திரட்டி கைகளில் ஏந்தி வந்து இறைவனின் திரு கரங்களில் கொடுக்க, சிவபெருமான் அதனை வாங்கி தனது வாயில் போட்டு கொள்கிறார். இதனை அருகில் இருந்து பார்க்கும் லோகமாதா தனது கரத்தினால் இறைவனின் கழுத்தை பிடித்து கண்டத்தில் விஷத்தை நிறுத்தி விடுகிறார். (இதனால் சிவபெருமானை ""திரு நீலகண்டர்"" என்னும் என்னும் நாமத்துடன் அழைக்கிறோம். சுந்தரை நாம் ""ஆலால சுந்தரர்"" என்று அழைக்கிறோம்). இதனை கண்ட பிரம்மா, விஷ்ணு, தேவர்கள், கின்னரர்கள், ரிஷி, முனிவர்கள், ஆனந்த "" ஜெய ஜெய"" கோஷம் எழுப்பினார்கள். இவர்களின் சந்தோஷத்தை கண்ட சிவபெருமான் பார்வதி தேவியுடன் நந்திதேவரின் கொம்புகளுக்கு இடையே நின்று ஆனந்த தாண்டவம் ஆடுகிறார். ஆனந்த தாண்டவத்தை கண்ட பிரம்மா தாளம் போட, விஷ்ணு பேரிகை வாசிக்க, சரஸ்வதி வீணை வாசிக்க, சூர்ய, சந்திரர்கள் புல்லாங்குழல் வாசிக்க, சித்தர்கள், அப்சரஸ்கள், கின்னரர்கள் சுருதி மீட்ட, நந்தி, பிருங்கி இருவரும் மத்தளம் வாசிக்க, நாரதர் சங்கீதம் பாடியும் எம்பெருமானின் ஆனந்த தாண்டவத்தை கண்டு களித்தார்கள் .

இந்த வேளையே கார்த்திகை மாதம், தேய்பிறை திரயோதசி திதியும், சனிக்கிழமை மாலை வேளை 04.30 மணி முதல் 06.00 மணி வரை ஆகும். இதுவே மகாபிரதோஷ காலம் ஆகும்.

**சோமசூத்திர பிரதக்ஷணம்.**

வழக்கப்படி நாம் செய்யக்கூடிய முறையை விடுத்து, நந்தியின் பின்னால் நின்று அதன் இரு கொம்புகளின் வழியாக, சுவாமி தரிசனம் செய்ய வேண்டும்.அதன்பின், வழக்கப்படி வலம் வராமல், எதிர்வலமாக வந்து, சண்டிகேஸ்வரர் சன்னிதி வரை சென்று திரும்ப வேண்டும். பின் வலமாக வந்து அபிஷேக தீர்த்தம் வரும் கோமுகம் வரை வந்து பின் இடப்புறமாக வந்து நந்தி எம்பெருமானின் முன் வணங்க வேண்டும் . இதுபோல் மூன்று முறை பிரதக்ஷனம் செய்வதே சோமசூத்ர பிரதக்ஷனம் ஆகும். இது ஆலகால விஷத்தில் இருந்து காப்பாற்றுமாறு தேவர்கள் கைலாயம் சென்று வேண்டிய போது, இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக ஓடியதைக் குறிக்கும்.

**பிரதோஷத்தின் வகைகள்.**

**தின பிரதோஷம்.**

தினமும் மாலை 4 .30 மணிக்கு மேல் 6 .00 மணி வரை தின பிரதோஷம்.

**பக்ஷ் பிரதோஷம்** வளர் பிறை திரயோதசி திதி வருவது பக்ஷ் பிரதோஷம்.

**மாத பிரதோஷம்**

தேய்பிறை திரயோதசி திதி வருவது மாத பிரதோஷம்.

**மஹா பிரதோஷம்** சனிக்கிழமை திரயோதசி திதி வருவது சனி மஹா பிரதோஷம்.

**பூர்ண பிரதோஷம்**

திரயோதசி திதி வரும் நாள் முழுவதும் திரயோதசி திதி இருந்தால் பூர்ண பிரதோஷம் ஆகும்.

### திவ்ய பிரதோஷம்

துவாதசி திதியும் திரயோதசி திதியும் சேர்த்து வருவது அல்லது திரயோதசி திதியும் சதுர்த்தசி திதியும் சேர்த்து வருவது திவ்ய பிரதோஷம்.

### அஷ்ட பிரதோஷம்

சித்திரை, வைகாசி, ஐப்பசி , கார்த்திகை மாதங்களில் வரும் எட்டு பிரதோஷம் அஷ்ட பிரதோஷம் ஆகும்.

### மஹா பிரளய பிரதோஷம்

பிரளய காலத்தில் அனைத்து ஜீவன்களும் சிவபெருமானிடம் ஒடுக்கும் போழுது பிரளய தாண்டவம் ஆடுவார் அதுவே மஹா பிரளய பிரதோஷம் ஆகும்.

அந்த அந்த கிழமைகளில் வரும் பிரதோஷத்தின் பலன் என்ன என்று பார்போம்

### ஞாயிறு கிழமை பிரதோஷம்:

சிம்மம ராசி , லக்னம் , சூரிய திசை நடப்பவர்கள் கண்டிபாக ஞாயிறு கிழமை அன்று வரும் பிரதோஷத்திற்கு செல்ல வேண்டும்.

**பலன்:**

சூரிய பகவன் அருள் நமக்கு கிடைக்கும். சூர்ய திசையினால் வரும் துன்பம் விலகும் . பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கண் பார்வை நோய்கள் குணமாகும். பித்ரு தோஷங்கள் விலகும்.

### திங்கள் கிழமை பிரதோஷம்:

பிரதோஷத்தில், ஸோம வார பிரதோஷம் (திங்கள் கிழமை) மிகவும் சிறப்பு வாய்ந்தது. கடக ராசி, லக்னம், சந்திர திசை நடப்பவர்கள், திங்கள் அன்று வரும் பிரதோஷத்திற்கு செல்ல வேண்டும்.

**பலன்:**

மன நிம்மதியும் மகிழ்ச்சியும் கிட்டும். மன வலிமை பெருகும். கேதுவால் ஏற்படும் தோஷங்கள் நீக்கும். மாத்ரு வர்க்கத்தின் ஆசிகள் கிடைக்கும் .

### செவ்வாய் கிழமை பிரதோஷம்:

செவ்வாய் திசை நடப்பவர்கள், செவ்வாயை லக்னாதி பதியாக கொண்டவர்கள், மேஷம், விருச்சிகம் ராசி காரர்கள் செவ்வாய் கிழமை அன்று வரும் பிரதோஷத்திற்கு செல்ல வேண்டும்.

**பலன்:**

செவ்வாயால் வரும் கெடு பலன் நீங்கும்.பித்ரு தோஷம் நீங்கும். கடன் ,ருனம் ,ரோகம் தொல்லை தீரும். ராகு வால் ஏற்படுத்தும் தோஷங்கள் நீக்கும். எந்த ராசி, நக்ஷத்திரத்தை உடையவரக இருந்தாலும், ஒரு செவ்வாய் கிழமை அன்று வரும் பிரதோஷத்திற்கு வைதீஸ்வரன் கோவில் சென்று வைத்தியநாதரை, அல்லது மடவார் விளாகம் வைத்தியநாதரை வழிபட்டால் அவர்களுக்கு வரும் ருனம், ரோகம் நீங்கும் என்பது சிவ வாக்கு.

**புதன் கிழமை பிரதோஷம்:**

புதன் திசை நடப்பவர்கள், புதனை லக்னாதிபதியாக கொண்டவர்கள், மிதுனம், கன்னி ராசியில் பிறந்தவர்கள் புதன் கிழமை அன்று வரும் பிரதோஷத்திற்கு செல்ல வேண்டும்.

**பலன்:**

புதனால் வரும் கெடு பலன் நீங்கும். கல்வியில் சிறந்தவர்களாகவும். அறிவில் சிறந்தவர்களாகவும். படிக்காத பிள்ளை நன்றாகவும் படிக்கும். ஞானம் கிட்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தவறாமல் புதன் அன்று வரும் பிரதோஷத்திற்கு அழைத்து செல்ல வேண்டும், இதனால் அவர்கள் கல்வி சிறக்கும். தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவார்கள்.

**வியாழக்கிழமை பிரதோஷம்:**

குரு திசை நடப்பவர்கள், குருவை லக்னாதிபதியாக கொண்டவர்கள், தனுசு, மீனம் ராசி காரர்கள் வியாழக்கிழமை அன்று வரும் பிரதோஷத்திற்கு செல்ல வேண்டும்.

**பலன்:**

குரு பார்க்க கோடி நன்மை . குரு கிரகத்தால் ஏற்படும் தோஷங்கள் நீங்கும் , திருமண தடை விலகும் , வேலையில் முதன்மை பதவி கிடைக்கும் . எடுத்த காரியத்தில் எற்ப்படும் தடங்கள் நீங்கும் . ஞானம் சித்திக்கும் .

**வெள்ளி கிழமை பிரதோஷம்:**

சுக்ர திசை நடப்பவர்கள், சுக்கிரனை லக்னாதிபதியாக கொண்டவர்கள், ரிஷபம், துலாம் ராசி காரர்கள் வெள்ளி கிழமை அன்று வரும் பிரதோஷத்திற்கு செல்ல வேண்டும்.

**பலன்:**

சகல ஐஸ்வர்யங்களும் கிட்டும், அழகான கணவன் மனைவி அமையும், வீடு, வாகன யோகம் கிடைக்கும். முக அழகு கூடும்.

**சனி மஹா பிரதோஷம்:**

சனி பிரதோஷம் என்று கூறமட்டர்கள், சனி மஹா பிரதோஷம் என்றே கூறுவார்கள். ஏன் என்றால் அத்தனை சிறப்பு வாய்ந்தது சனி கிழமை வரும் பிரதோஷம் ஆகும். எந்த திசை நடந்தாலும் சனி பிரதோஷம் அன்று கோவிலுக்கு சென்று சிவனை வழிபடுவது சிறப்பு. மகரம், கும்பம் ராசி காரர்கள், லக்ன காரர்கள், ஏழரை சனி, அஷ்டம சனி, நடப்பவர்கள் சனியினால் வரும் துன்பத்தை போக்க கண்டிப்பாக சனி பிரதோஷத்திற்கு செல்ல வேண்டும்.

**பலன்:**

ஒரு சனி மஹா பிரதோஷம் சென்றால் 120 பிரதோஷம் சென்ற பலன் கிடைக்கும். கிரக தோசத்தால் ஏற்படும் தீமை குரையும். பஞ்சமா பாவமும் நீங்கும். ராகு, கேது வால் உண்டாகும் தோஷங்கள், பாவங்கள் நீக்கும், வீண்பழி பாவங்கள் நீக்கும், சிவபெருமானின் பூர்ண அருள் கிடைக்கும் .

**கண்டிபாக செல்ல வேண்டிய பிரதோஷங்கள் :**

வருடத்திருக்கு வரும் 24 பிரதோஷத்திற்கு போக முடியாதவர்கள் சித்திரை, வைகாசி,

ஐப்பசி , கார்த்திகை மாதங்களில் வரும் 8 பிரதோஷத்திற்காவது செல்ல வேண்டும், இந்த 8 பிரதோஷத்திற்கு சென்றால் ஒரு வருடம் பிரதோஷத்திற்கு சென்ற பலன் கிடைக்கும்.

**தேய்பிறையில் வரும் சனி பிரதோஷம் :- மிகவும் சிறப்பு வாய்ந்தது.**

**அவர் அவர் நக்ஷத்திரத்தன்று வரும் பிரதோஷம் கவலைகள் நீங்கும்.**

**நந்தி எம்பெருமான் வாழிபாடு.**

பிரதோஷ காலத்தில் நந்திதேவரின் கொம்புகளுக்கு இடையே ஆனந்த தாண்டவம் ஆடுகிறார் சிவபெருமான் ஆகையால், நாம் நந்தி எம்பெருமானுக்கு அருகம்புல், வில்வம் சாற்றி, கருப்பு உளுந்து, காப்பரிசி நெய்வேத்தியம் செய்து, வழிபட்டால் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

சிவபெருமானுக்கு அபிஷேக திரவியங்களை கொடுத்தும், வில்வம் சாற்றி, பூ மாலைகள் சாற்றி ஆராதனை செய்து, வெண் பொங்கல் நிவேதனம் செய்து வழிபட்டால் நமக்கு பதினாறு செல்வங்களும் பெற்று இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழலாம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

நன்றி வணக்கம்.

அன்புடன்.

““சிவாகம சிரோமணி““

**சிவப்ரம ஸ்ரீ .சு . ராஜ சேகர குருக்கள்.**

அருள் மிகு ஈழபதிஸ்வர் ஆலய தலைமை குருக்கள், இலண்டன்.

உ

# கந்தபுராணமும் வாழ்வியலும்

**தமிழ்மணி அகளங்கன் (நா.தர்மராஜா)**

90, திருநாவற் குளம், வவுனியா

"கந்தப் புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை" என்பது கந்தபுராணம் பற்றிய பொதுக் கூற்று. சிவபெருமானே முருகனாக உதித்தார் என்பது கந்தபுராணத்தை ஊன்றிப்படிப்பவர் யாவரும் அறிந்து கொள்ளக் கூடிய செய்தி.

### சிவனும் முருகனும்

கந்த புராணத்தைப் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் பல இடங்களில் சிவபெருமானும் முருகப்பெருமானும் ஒருவரே என்பதைப் பாடியுள்ளார். கந்தபுராணத்தைப் படிப்பவர் அடையக்கூடிய பயன் என்ன என்பதை "இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற்று இனிது மேவி—- "எனத்தொடங்குகின்ற நூற்பயன் என்ற வகைப் பாடலில் அழகாகச் சொல்கிறார். அதில் "சிவகதி அதனில் சேர்வர்." என்பதையே உயர்ந்த இறுதி நிலைப் பயன் எனக் கூறுகிறார்.

கந்தபுராணத்தை விருப்பத்தோடு படிப்பவர் அடையக்கூடிய பயன்களில் இறுதிப் பயன் சிவகதியில் சேருதல் என்கிறார் கச்சியப்பர். முருககதி என்றோ முருகனின் உலகம் என்றோ சொல்லவில்லை.

முருகப்பெருமானின் பெருமைகளைக் கொண்ட கந்தபுராணத்தைப் படிப்பவர்கள் சிவகதியில் சேருவார்கள் என்றால், முருகனை வழி படுபவர்களும் அந்தச் சிவகதியையே சேருவார்கள் என்பது தெளிவு. எனவே முருகனும் சிவனும் வேறு வேறானவர்கள் இல்லை.

கவிக்கூற்றாக இதனைப் பார்த்தோம். சிவபெருமானே தானும் முருகனும் வேறல்லர் என்பதை உமாதேவியாருக்குச் சொல்வதைப் பார்ப்போம். உமாதேவியார் முருகப் பெருமானைப்பற்றிக் கேட்டபோது சிவபெருமான் சொல்கிறார்.

"ஆதலின் நமது சக்தி அறுமுகன், அவனும் யாமும்
பேதகம் அன்றால், ------- உற்பத்திக்காண்டம் 1070
"அறுமுகனுக்கும் எனக்கும் வேறுபாடு இல்லை." என்கிறார் சிவபெருமான்.

### வாழ்வியல்

ஆன்மீகம் என்பது ஆன்மாவை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வது என்றபொருள் கொண்ட சொல். மீ என்பதன் பொருள் மேலே என்பதாகும். ஆன்மா உயர் நிலைக்குச் செல்வதற்குப் பலபடிகளைக் கடக்க வேண்டும். இந்தப் பூமியில் வாழ்கின்ற மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்தாலே உயர் நிலையை அடைய முடியும் என்பது ஞானிகள் வாக்கு.

உலகப் பொது மறை என்று போற்றப்படுகின்ற திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் இக்கருத்தைத் தனது திருக்குறளில் பின் வருமாறு அழகாக விளக்குகிறார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் ------- குறள்--50

வாழ வேண்டிய முறைப்படி பூமியிலே வாழ்பவன் வானத்திலே வாழுகின்ற தெய்வங்களுக்குள் ஒருவனாக வைக்கப்படுவான். வாழ்பவன் என்பதை வாழ்பவர் எனப்பொருள் கொண்டு பெண்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

"வாழ்வாங்கு வாழ்தல்" என்பது தான் சமயங்கள் போதிக்கின்ற வாழ்வியல் வழியாகக் காணப்படுகின்றது. இந்தப் பூமியில் எப்படி வாழவேண்டும் என்பதை இந்து சமயம் மிகச் சிறப்பாகச் சொல்லியிருக்கிறது. இந்து சமயம் காட்டிய வழியைப் பின்பற்றி வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் பலர் உண்டு. அவர்கள் எல்லாம் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பட்டுள்ளனர்.

இந்த அடிப்படையில் தான் இறந்தவர்களைத் தெய்வமாகப் பூசிக்கும் வழக்கம் வந்தது. புராணங்கள் இதிகாசங்கள் என்பவை வாழ்வியலைப் புறந்தள்ளி ஆன்மீகத்தைச் சொல்லவில்லை. எல்லாப் புராணங்களிலும் எல்லா இதிகாசங்களிலும் வாழ்வியல் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

பெரியபுராணம் என்று இன்று வழங்கப்படுகின்ற திருத்தொண்டர் புராணம் வாழ்வியலையே முக்கியப்படுத்தியுள்ளதைக் கற்றோர் அறிவர். அறுபத்தி மூன்று நாயன் மார்களும் இந்தப் பூமியில் எப்படி வாழ்வாங்கு வாழ்ந்து முத்தியடைந்தார்கள் என்பதை பெரிய புராணம் அற்புதமாகச் சொல்கிறது.

கந்தபுராணம் என்றவுடன் இது கடவுளைப் பற்றியது தானே, இதில் வாழ்வியலைத் தேட முடியுமா என்று நினைப்பவர்கள் சிலர் உண்டு. அவர்கள் நரிவாலைக் கொண்டு கடலாழம் காண முயல்பவர்களே.

கந்த புராணத்தைப் படிப்பவர்கள் அடைகின்ற பயன் என்ன என்பதை "நூற் பயன்" என்ற பகுதியில் கச்சியப்ப சிவாச்சாரியார் பின்வருமாறு தெளிவாக விளக்குகிறார்.

கந்தவேள் புராணத்தை மிகுந்த விருப்பத்தோடு படிப்பவர்கள் இந்தப் பூமியிலேயே இந்திரர்களைப் போன்ற பெருவாழ்வு பெற்றவர்களாக, இன்பங்களை அனுபவித்து, இனிய வாழ்க்கை வாழ்ந்து, மனதிலே நினைத்த காரியங்கள் யாவும் குறைவில்லாமல் நிறைவேறப் பெற்றவர்களாகி சிவகதியை அடைவார்கள். என்கிறார் கச்சியப்பர்.

இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற்று இனிது மேவி
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனில் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித்து ஓதுவோரே.

இது மட்டுமன்றி கந்த புராணத்தின் வாழ்த்துப் பாடல் உலகியலாகிய வாழ்வியலோடு ஆன் மீகத்தை இணைத்து அருமையாகச் சொல்லப் பட்டுள்ளது.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க. குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

"ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மழைமுகில்கள் மழையைக் காலம் தவறாமல் பெய்யட்டும். பூமியில்

வளங்கள் சுரந்து பெருகட்டும். மன்னன் செங்கோல் ஆட்சி நெறிமுறை தவறாமல் நல் ஆட்சி புரியட்டும். உயிர்கள் யாவும் குறைவில்லாத நிறைவான வாழ்க்கையை வாழட்டும். நான்கு வேதங்களின் அடிப்படையில் அறங்கள் மேலோங்கட்டும். நல்ல தவங்களும், வேள்விகளும் பெருகட்டும்."

எனச் சொல்லி இவ்வளவும் அமைந்ததுதான் சைவ வாழ்வியல். இதன் மூலம் "மேன்மை பொருந்திய சைவ நீதி உலகம் முழுவதும் விளங்கட்டும்" என்கிறார் கச்சியப்பர்.

எனவே உலகியல் வாழ்வு சிறப்பானதாக இருந்தால் மட்டுமேதான் ஆன்மீகம் சிறக்கும் என்பது அவர்கருத்தாகத் தெரிகிறது. சைவசமயம் துறவுச் சமயம் அல்ல. அது உறவுச் சமயம். யாரையும் வலிந்து துறவியாக்குவது சைவசமயத்தின் நோக்கமல்ல. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி முத்தியடையச் செய்வதே சைவ நெறி.

இம்மை சிறந்தால் மறுமையும் சிறக்கும். சுந்தர மூர்த்தி சுவாமிகள் சிவபெருமானைப் பற்றிப் பாடும்போது "இம்மையே தரும் சோறும் கூறையும்" என்றும் "அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லை"என்றும் பாடுகிறார்.

**குருவும் சீடனும்**

ஓம் என்ற மந்திரத்தின் பொருளை அறியாதவனாக, முருகப் பெருமானும் சிவபெருமானும் ஒருவரே என்பதையும் அறியாதவனாக, அதேவேளை யாவற்றைம் கற்றுவிட்டோம் என்ற செருக்குக் கொண்டவனாக விளங்கிய பிரமதேவனைக் குட்டிச் சிறையில் அடைத்து, தானே படைத்தற் தொழிலைப் புரிகிறார் முருகப் பெருமான்.

ஒருவன் ஒரு தொழிலைச் செய்யும் போது அதன் அடிப்படையை முழுதாகத் தெரிந்து கொண்டு செய்யவேண்டும். அல்லது தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வமாவது இருக்கவேண்டும். சிறியவர் பெரியவர் என்ற வேறுபாடின்றி யாவரையும் மதிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

வேதங்களை ஓதுபவன் முதலில் சொல்கின்ற சொல் ஓம் என்பது. அந்தச் சொல்லுக்கே விளக்கம் தெரியாதவன் வேதங்களை ஓதிப் பயன் என்ன. அதன் அடிப்படையில் அவனால் எப்படி உலகங்களைப் படைக்க முடியும். பிரம்ம தேவன் செய்த தவறுகள் இவைதான். இது வாழ்வியலில் யாவருக்கும் தெரியவேண்டிய ஒரு தத்துவம்.

சிவபெருமான் முருகப் பெருமானிடம் வந்து பிரம்மனைச் சிறை நீக்கச்செய்து விட்டு ஓம் என்ற மந்திரத்தின் பொருளை முருகனிடம் கேட்கிறார். "மந்திரத்தைச் சொல்பவன் குரு, கேட்பவன் சீடன். நீங்கள் கைகட்டி வாய்பொத்தி பணிந்து என்காடியில் அமர்வீர்களானால் உயர்ந்த ஆசனத்தில் இருந்து நான் பொருள் சொல்வேன்" என்கிறார் முருகப் பெருமான். அப்படியே தான் சிவபெருமான் உபதேசம் கேட்கிறார்.

"சிவனார் மனம் குளிர உபதேச மந்திரம் இரு செவி மீதினும் பகர் செய் குருநாதா" என்று அருணகிரி நாதர் இந்த அற்புதக்காட்சியைப் புகழ்கிறார்.

முற்காலத்தில் கல்வி முறையில் குரு சீட பரம்பரையில் இந்த முறையே பின்பற்றப் பட்டது. இந்த வாழ்வியல் அழிந்து போனதால் தான் இன்றைய கல்வி "அல்லலுற்றிடு மண்படு கல்வி"யாக மாறிவிட்டது. ஆசிரியரை மாணவன் மதிக்கவேண்டும் என்ற வாழ்வியல் கருத்து எக்காலத்துக்கும் தேவையானதே.

### மன்மதன் இரதி

சிவபெருமானின் யோகத்தைக் கலைத்து அவருக்குக் காமம் உண்டாக்க வேண்டுமென்று தேவர்கள் தீர்மானித்து பிரம்ம தேவர் மூலம் மன்மதனை ஏவுகிறார்கள்.

மன்மதன் மறுத்தான். பிரமதேவரின் சாபத்தினால் அழிவதைவிட சிவபெருமானினால் அழிந்து போகலாம் என முடிவு கட்டி சிவபெருமான் மேல் பஞ்சபாணங்கள் எனப்படும் ஐந்து மலர்க் கணைகளைச் செலுத்துகிறான். சிவபெருமான் நெற்றிக்கண்ணைத் திறக்கிறார். மன்மதன் எரிந்து சாம்பலாகிவிடுகிறான். அவனது மனைவி இரதிதேவி அழுது புலம்பி சிவபெருமானிடம் முறையிடுகிறாள். சிவபெருமான் மன்மதனை மன்னித்து தனது திருமணத்தின் போது உயிர்ப்பித்துத் தருவதாகக் கூறுகிறார். அதன்படியே பின்பு மன்மதன் உயிர் பெறுகிறான். நீதி வழங்க வேண்டிய நீதிபதி மேலேயே குற்றம் இழைக்கப்பட்டதால் விசாரணை இன்றியே உடனடியாகத் தண்டனை வழங்கப்படுகின்றது. தண்டனைக்குப் பின் வழக்கு அதே நீதிபதியிடம் வருகிறது. மேன்முறையீட்டு நீதி மன்றம். முறையிட்டவள் மனைவி இரதி. சிவபெருமானாகிய நீதிபதி வழக்கை விசாரிக்கிறார்.

தண்டனையைக் குறைக்கிறார். இன்னொருவரின் வற்புறுத்தலாலோ, ஏவலாலோ, அச்சுறுத்தலாலோ, நிர்ப்பந்தத்தாலோ செய்தாலும் குற்றம் குற்றம் தான். அதற்குரிய தண்டனையை சில நாட்கள் அவன் அனுபவிக்கட்டும். அவன் மற்றவர் கண்ணுக்குத் தெரிந்தவனாக இருந்தால் இனியும் குற்றம் செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதால் அவன் இரதியின் கண்களுக்கு மட்டுமே தென்படுவான் என தீர்ப்பு வழங்குகிறார் சிவபெருமான்.

குற்றம் நடந்ததற்கு மட்டுமல்ல இனிமேல் குற்றம் செய்யாதிருப்பதற்கான வழியையும் தனது தீர்ப்பின் மூலம் காட்டுகிறார் சிவபெருமான். இது இன்றைய நீதி மன்றங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கக்கூடிய விதி முறையல்லவா. இன்று எத்தனை வழக்குகள் பிழையான தீர்ப்பினால் நீதியை இழந்திருக்கின்றன. மேன் முறையீட்டினால் நீதி காப்பாற்றப்பட்டிருக்கிறது. மேன் முறையீடு செய்ய வகை அற்றவர்களாக எத்தனைபேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிலப்பதிகாரத்து கண்ணகி வழக்குரையும் மேன்முறையீடே என்பதையும் இத்தோடு நினைவு கூரலாம்.

### திருமணம்

முருகப் பெருமானுக்கும் தெய்வயானைக்கும் திருப்பரங்குன்றத்தில் திருமணம் நடக்கின்றது. இத்திருமணம் பெண்ணின் பெற்றோர் செய்து வைத்த திருமணமாக அமைகிறது. முருகப்பெருமான் வள்ளி அம்மையைக் காதலித்துக் காந்தர்வ மணம் புரிந்து கொள்கிறார். இது காதல் திருமணமாக அமைகிறது.

இந்த இரண்டுவகைத் திருமணங்களே ஏற்றுக்கொள்ளப்படத்தக்க திருமணங்கள் என்பதைக் கந்த புராணம் காட்டுகிறது. ஏனைய வகைத் திருமணங்கள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவை அல்ல என்பதை இதன் மூலம் வாழ்வியலுக்கு வழங்குகிறார் கச்சியப்பர்.

கடத்திக் கொண்டுபோய் திருமணம் செய்தல், வன்புணர்வு மூலமான பைசாசத் திருமணம் செய்தல், விலைபேசி விற்றல் வாங்கல் மூலமான திருமணங்கள், வற்புறுத்தல் மூலமான திருமணங்கள் எனப் பலவகைத் திருமணங்களில் பெற்றோர் நிச்சிதம், காந்தர்வம் ஆகிய இரண்டு திருமணங்களையே கந்தபுராணம் வாழ்வியலாகக் காட்டுகிறது.

## பிள்ளை வளர்ப்பு

காசிப முனிவரை, சுரசை என்னும் பெயர் கொண்டவளும், அசுரேந்திரனின் புத்திரியுமான மாயை என்பவள் மயக்கி புதல்வர்களைப் பெறுகிறாள். ஐம்புலன்களையும் அடக்கிய ஆற்றல் மிக்க முனிவர் அழகிய பெண்ணில் ஆசை கொண்டதால் ஏற்பட்ட விபரீத விளைவால் சூரன், சிங்கமுகன், தாரகன், அசமுகி முதலாக இலட்சோப லட்சமாக அதீத ஆற்றல் பெற்ற அசுரப் பிள்ளைகள் பிறக்கிறார்கள்.

கற்றோரும், ஞானிகளும், வல்லமை மிக்கவர்களும் காம வசப்பட்டால் உலகுக்குத் துன்பம் நேரும் என்பதைக் கந்தபுராணம் சொல்கிறது. அந்தப் பிள்ளைகளுக்கு, காசிபமுனிவர் "தவத்தைச் செய்து சிவத்தைத் தேடுங்கள்" எனப்போதிக்க, தாயாகிய மாயையோ "செல்வங்களையும் வீரத்தையும் பெற்று போகங்களை நுகருங்கள். உங்களுக்குப் பாவங்கள் என்று எவையும் வரா" எனத் துர்ப்போதனை செய்கிறாள்.

பிள்ளைகள் தாயின் சொற்படியே வளருகின்றனர். அறிவு பூர்வமாகத் தந்தை கற்பிக்க, தாயோ உணர்வு பூர்வமாகக் கற்பித்து தேவர்களைப் பழி வாங்கும் எண்ணத்தை விதைக்கிறாள். தாயின் போதனையே வெல்கிறது. கல்வியில் இச்செயற்பாடு கவனிக்கத்தக்கது. கந்த புராணம் காட்டும் கல்வி நெறியாக இதையும் சொல்லலாம்.

## நன்றி

கந்த புராணம் என்றதும் நன்றி மறந்தவன் அழிவான் என்பதுதான் அதன் மையக் கருத்து என்பது அறிஞர்கள் அபிப்பிராயம்.

சூரபன்மனின் மகனாகிய இரணியன் தந்தைக்கு அறிவுரை கூறுகிறான். நன்றி மறந்தவனுக்கு அந்தச் செய்கையே கூற்றுவனாக வந்து கொன்றுவிடும். வேறு கூற்றுவன் தேவையில்லை என்கிறான்.

ஒன்றொரு பயன்தனை உதவினோர் மனம்
கன்றிட ஒருசெயல் கருதிச் செய்வரேல்
புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ. ---------யுத்தகாண்டம்---6065

வரம் தந்த சிவபெருமானே வந்திருக்கிறார். அவர் செய்த நன்றியை மறந்து அவரோடு போர் செய்தல் நன்றி கொன்ற செயலாகும் என்கிறான் இரணியன். சூரனின் உயிரை கூற்றுவனால் கவரமுடியாது என்பதால் நன்றியே கொன்றிடும். வேறு கூற்றுவன் தேவை இல்லை என்கிறான்.

## காவிரி

அகத்திய முனிவர் சிவபெருமானிடம் வேண்டி சிவபூசைக்காகக் காவிரியைத் தன் கமண்டலத்தில் பெற்றுக்கொண்டுவந்து கொங்கு நாட்டில் இருக்கிறார். தேவேந்திரன் சூரனுக்குப் பயந்து தமிழ் நாட்டில் சீர்காழியில் இருக்கிறான்.

சீர்காழியில் சிவபூசை செய்வதற்காகப் பூஞ்சோலை அமைக்கிறான். தண்ணீரின்றி பூஞ்சோலை வாடிப் போனதால் பூசைக்குப் பூக்கள் கிடைக்கவில்லை.

நாரத முனிவர் இந்திரனுக்கு ஒரு யோசனை சொல்கிறார். அகத்திய முனிவரின் கமண்டலத்திலிருக்கும் காவிரி நீரை நிலத்திலே ஓடச்செய்தால் உனக்குப் பயன்படும். விநாயகப்

பெருமான் மூலம் கமண்டலத்தைக் கவிழ்க்கலாம். என்கிறார். அதன்படி தேவேந்திரன் விநாயகப் பெருமானை வழிபட்டு வேண்ட அவர் காக வடிவெடுத்துச் சென்று குடகுமலையில் இருந்த அகத்தியரின் கமண்டலத்தின் மேல் அமர்ந்து அதனைக் கவிழ்த்துவிடுகிறார்.

கமண்டலத்திலிருந்த காவிரி பெருக்கெடுத்து ஓடுகிறது. அகத்தியர் காகத்தைத் துரத்த அது ஒரு சிறுவன் வடிவில் காட்சிதர கோபங்கொண்ட அகத்தியர் சிறுவனைத்துரத்தி அவன் தலையில் இரண்டு கைகளாலும் குட்ட முயல சிறுவன் விநாயகராகக் காட்சிதருகிறான். அகத்தியர் தனது தலையிலேயே குட்டிக் கொண்டு விநாயகப் பெருமானை வணங்குகிறார்.

அகத்தியரிடம் என்ன வரம் வேண்டும் என்று விநாயகப் பெருமான் கேட்க "உங்களை நினைத்து எவர் தனது தலையில் குட்டிக் கும்பிடுகிறாரோ அவருக்கு நல்ல அறிவையும் ஆற்றலையும் தரவேண்டும்" என்று வேண்டுகிறார். என கந்தபுராணம் சொல்கிறது.

கமண்டலத்திலே அடங்கி இருந்த காவிரி நீர் அகத்தியரின் ஆன் மீகத்திற்கு மட்டுமே பயன்பட்டது. அது அகன்ற காவிரியாகப் பாய்ந்து சென்றதால் தேவேந்திரன் சீர்காழியில் அமைத்த தோட்டத்துக்கு மட்டுமன்றி செல்லுகின்ற இடமெல்லாம் செழிப்பாக்கி மக்களின் வாழ்க்கைக்கும் பயன்பட்டது, என்பது இந்த இடத்திலே சிந்திக்கத்தக்கது.

ஓடுகின்ற காவிரி சீர்காழிக்குச் சென்று தேவேந்திரனின் சிவ பூசையாகிய ஆன் மீகத்திற்கும் பயன்படும், செல்லும் இடமெங்கும் உலகியலுக்கும் பயன்படும் என்ற நாரதரின் வாழ்வியல்ச் சிந்தனையை வியவாமல் இருக்க முடியாது. கந்தபுராணமும் இப்படிப்பட்டதே. ஆன்மீகத்திற்கும் பயன்படும். உலகியலுக்கும் பயன்படும்.

**சேவலும் மயிலும்**

ஒளியை விரும்பி சூரியனை அழைத்துக் கூவுகின்ற சேவலை முருகன் கொடியாக உயர்த்திப் பிடித்திருக்கிறான். இருளை விரும்பி மழை முகிலைக் கண்டு மகிழ்ந்து ஆடுகின்ற மயிலை அடக்கி அதனை வாகனமாக்கி தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான்.

மனிதன் கல்வி அறிவு ஆகிய ஒளியை விரும்பி அழைக்கவேண்டும், அறியாமை, ஆணவம் ஆகிய இருளை அடிமைப்படுத்தி தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும் என்ற தத்துவத்தை சேவலும் மயிலும் வாழ்வியல் தத்துவமாக உணர்த்துகின்றன.

**நிறைவு**

கந்தபுராணம் எங்கு தொட்டாலும் மணக்கும் மல்லிகை. கந்தபுராணக் கடலுள் வாழ்வியல் முத்துக்கள் சிதறிப் பரந்து கிடக்கின்றன. ஏராளமான வாழ்வியல் தத்துவங்களை கந்தபுராணத்தில் கண்டுகொள்ளலாம். அவரவர் அறிவுக்கு ஏற்ப அவரவர் அவைகளைக் கண்டுகொள்ளலாம். மாணிக்க வியாபாரிக்குத்தான் மாணிக்கத்தின் அருமையும், பெருமையும் தரமும் தெரியும். எனவே எமது அறிவுத் தரத்திற்கு ஏற்ப இன்னும் பல வாழ்வியல் தத்துவங்களைக் கந்தபுராணத்திலிருந்து கண்டு கொள்வோம். நன்றி

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்."

வேல்ஸ் ஸ்ரீ கல்பக விநாயகர் தேவஸ்தானம்
**Wales Sri Kalpaga Vinayakar Temple**
**Unit 43, Addison Road, Port Talbot, SA12 6HZ.**
**Tel: 01639 779872 , 07870831417**

"ஊரிலான் குணங் குறியிலான் செயலின் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்"

என்பது கந்த புராணத் திருவாக்கு. இறைவனுக்கு ஊர், குணம், அடையாளம், செயல் பேர், காலம், பற்றுக்கோடு, போக்கு, வரவு, உயர்வு, ஒப்பு முதலிய ஒன்றும் இல்லை. பேரும் ஊரும் இல்லாத பெருமான் ஆன்மாக்களின் பொருட்டு - ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு பேரும் உருவும் தாங்கிவருகின்றான். இத்திருவருளின் இயல்பை உள்ளவாறு உணராத புலவர்கள் இறைவனுக்கு நாம ரூபம் நம்மால் கற்பிக்கப்பட்டன என்பார்கள்.

மூவாண்டுடைய சீர்காழிப்பிள்ளையார் அழுதலும் அவருடைய பண்டைத் தவ வலிமையால் இறைவன் திருவுருவுடன் காட்சி தருகின்றான். வெள்ளை விடையும், பவளமலை போன்ற திருவுருவும், அருகில் மரகதக் கொடி போன்ற அம்பிகையும், பிறையணிந்த திருமுடியும், மான்மழு ஏந்திய திருக்கரங்களும், நீல கண்டமும், தோடணிந்த தாழ்செவியும், கருணை பொழியும் மலர்க் கண்களும், நீறணிந்த திருமேனியுங் கண்டு, அச்சிறிய பெருந்தகையார் "தோடுடைய செவியன்" என்று பாடுகின்றார். அத்திருமேனியை மூவாண்டுக் குழந்தை கற்பனை புரியவில்லை. கண்ட காட்சியைக் குழறுகின்றது.

சூரபன்மனுக்குச் சிங்கமுகன் கூறுகின்ற அறவுரையைக் கந்த புராணத்தில் காண்க.

வாலிதா மதிச் சடிலமும் பவளமால் வரையே
போலு மேனியும் முக்கணும் நாற்பெரும் புயமும்
நீல மாமணிக் கண்டமும் கொண்டு நின்றனனால்
மூலகாரணம் இல்லதோர் பராபர முதல்வன்
தன்னை நேரிலாப்பரம் பொருள் தனியுருக்கொண்ட
தென்ன காரணம் என்றியேல் ஐந்தொழில் இயற்றி
முன்னை ஆருயிர்ப் பாசங்கள் முழுவதும் அகற்றிப்
பின்னை வீடுபேறருளுவான் நினைந்த பேரருளே.

இவ்வண்ணம் சிவமூர்த்தி ஆன்மாக்களின் நலன் கருதி எடுத்துக்கொண்ட திருவுருவங்கள் பல. அவற்றுள் மிகவும் தொன்மையானது

ஆறுமுக வடிவம்.

"அந்திக்கு நிகழ்மெய்யண்ணல் அருள் புரிந்தறிஞராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான்"

... கந்தபுராணம்.

"பழைய வடிவாகிய வேலா" ... திருப்புகழ்.

தேவர்கள் துயர்தீர்க்கும் பொருட்டு, வடிவும் வண்ணமும் இல்லாத முடிவிலாப் பரம்பொருள், மூவிரு முகங்களும், ஆறிருபுயங்களும், மூவாறு நயனங்களும் அமைந்த திருமேனி கொண்டு அருள் புரிந்தார்.

"அருவமும் உருவும் ஆகி அனாதியாப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய"

எம்பிரான் சரவணப் பொய்கையில் இத்திருமேனி கொண்டு உதிக்கு முன்னரேயே முருகன் என்ற திருநாமத்தையுடையவன் என்பதை இப்பாடலால் அறிக.

முருகன் வந்து உதித்தான்.

"சாத்தான் வந்தான்" என்றால், வந்தது பின்னர், சாத்தான் என்ற பெயர் முன்னர் என்பது விளங்குந்தானே. மிகப்பழமையான திருநாமம். முருகன் என்பது. முருகனுடைய திருநாமங்கட்கெல்லாம் சிவபெருமான் உமாதேவியிடம் காரணங்கள் கூறுகின்றார். "இன்ன காரணத்தால் இன்ன பெயர் அமைந்தது" என்று கூறுகின்றார்.

"ஆறுமுகங்கொண்டதால் சண்முகன்"
"கங்கையில் தவழ்ந்ததால் காங்கேயன்"
"கார்த்திகை மாதர் வளர்த்தனால் கார்த்திகேயன்"
"ஆறு திருவுருவும் ஒன்று கூடியதனால் கந்தன்"
"மயிலை வாகனமாக உடையவனாதலால் விசாகன்"

இன்ன காரணத்தால் முருகன் என்ற நாமம் அமைந்தது என்று அந்த வரிசையில் கூறவில்லை. இதனால் அத்துணைத் தொன்மை வாய்ந்த திருநாமம் முருகன் என்பதைத் தெற்றென உணர்க.

எம்மொழிக்கும் முதல்வனான முருகன் செம்மொழியான தமிழுக்குச் சிறப்புடைத் தலைவன் ஆவான். தமிழில் மூன்று இனம் உண்டு. அவை வல்லினம், மெல்லினம், இடையினம் எனப்படும். இவற்றுள் மெல்லினம் மென்மையும், இனிமையும் உடையது. ஆதலால் -

மெல்லினத்தில் ஒரு எழுத்து "மு"
இடையினத்தில் ஒரு எழுத்து "ரு"
வல்லினத்தில் ஒரு எழுத்து "கு"

என "முருகு" என்று மூவினத்தில் மூவெழுத்தைக்கொண்டு எந்தை கந்த வேளின் திருநாமம் அமைந்துளது. ஆண்டவன் ஆறு ஆகாரங்கட்கும் ஆறு சமயங்கட்கும் ஆறு அத்துவாக்களுக்கும், ஆறுபடை வீடுகட்கும் அதிபன். "முருகா" என்ற பெயரும் ஆறு பொருள்களைக் கொண்டது. தெய்வத்தன்மை, அழகு, இளமை, மகிழ்ச்சி, மணம், இனிமை என்ற ஆறு தன்மைகளையும் உடைய சொல் "முருகு".

"முருகுகள் இளமை நாற்றம்
முருகவேள் விழா வனப்பாம்"

என்று பிங்கள நிகண்டு கூறுகின்றது.

இதனைப் புலப்படுத்தவே அருணகிரிநாதர்,

"மெய்மைகுன்றா மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள்"

என்று கூறுகின்றார். இப்பாடலில் முருகா என்பது ஒருமை. நாமங்கள் என்பது பன்மை. பல நாமங்களின் பொருள்களையுடையது "முருகா" என்ற நாமம் என்பதை இப்படி உணர்த்துகின்றார். இறைவன் பல்லாயிரம் நாமங்கள் கொண்டவன். அவற்றுள் சிறந்த நாமம் மூன்று - முருகன், குமரன், குகன் என்பவை. இம்

மூன்றனுள்ளும் மிகச்சிறந்தது முருகன் என்ற நாமம்.

"முருகன் குமரன் குகன் என்று மொழிந்
துருகுஞ் செயல் தந்துணர் வென்றருள்வாய்"

என்று கந்தரநுபூதியில் கூறுகின்றார்.

உலகமெல்லாம் அஞ்சுகின்ற முகமாகிய கூற்றவனுடைய கோர்முகந் தோன்றுகின்றபோது "முருகா" என்றால் அப்பனுடைய ஈரமுகம் ஆறுந்தோன்றும். அக்கூற்றுவனுக்கும் நமக்கும் ஒருவேளை போர் நிகழுமாயின் அப்போது "முருகா" என்று ஓதினால் அஞ்சல் என அவனுடைய அயில்வேல் தோன்றும். ஒருகால் "முருகா" என நினைத்தாலும் போதும், அக்கருணாமூர்த்தியின் இருகாலும் தோன்றும். "முருகா முருகா" என்று ஓதினால் போதும். "முருகா" என்று கூறக்கூடாது ஓத வேண்டும். கூறுவது வேறு ஓதுவது வேறு.

கூறுவது - வாக்கு மட்டும் தொழில் படுவது. ஓதுவது - உணர்வுடன் காதலாகி உள்ளங் கசிந்து கண்ணீர் மல்குவது.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்" .. ஞானசம்பந்தர்.

"அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்"

"ஓம்" என்ற பிரணவ எழுத்து "அ உ ம்" என்ற மூன்று எழுத்துக்களின் சம்மேளனம். "அ" கரத்தில் தொடங்கி, "உ" கரத்தில் மடங்கி "ம" கரத்திலே ஒடுங்குகின்றது.

அ - சிருஷ்டிக்கின்றது
உ - இரட்சிக்கின்றது
ம - சம்மரிக்கின்றது

(சம்ஹாரம் ஸ்ரீ ஒடுக்கம்)

இந்த மூன்றில் சிருஷ்டி எழுத்தை பார்க்கிலும், சம்மார எழுத்தாகிய மகரத்தைப் பார்க்கிலும், ரக்ஷக எழுத்தாகிய உகரந்தான் உயர்ந்தது.

நாம் கடவுளை நோக்கி, "என்னை உண்டாக்குவாய். என்னை ஒடுக்கிக் கொள்வாய்" என்றா வேண்டுகின்றோம்? இல்லை "இறைவனே என்னைக் காப்பாற்று" என்றுதானே வேண்டுகின்றோம். எனவே காத்தலுக்கு உரிய எழுத்தாகிய உகரத்தையே பெரிதாகக் கொள்ள வேண்டும்.

குகையில் கற்முகி என்ற பூதத்தால் அடைப்பட்ட ஆயிரம் பேரையும் காப்பாற்று என்று பாடிய நக்கீரர், ரட்சக எழுத்தாகிய உகரத்தை முதலில் அமைத்து "உலகம் உவப்ப வலனேர்பு திரி தரு" என்று தொடங்கினார்.

தனியடியார் அறுபத்து மூவர்களையும், தொகையடியார் ஒன்பதின்மார்களையும், சிவபெருமான் காத்தருளிய வரலாற்றைக் கூற வந்தகம்பநாடரும் உகரத்தை முதலில் அமைத்தே "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" என்று ஆரம்பிக்கின்றார். அ-உ-ம என்ற மூன்றில் ரக்ஷக எழுத்தை முதலில் வைத்துச் சொன்னால், உமஅ ஸ்ரீ உமா என்று ஆகின்றது. இது அம்பிகையினுடைய உயர்ந்த திருநாமம்.

இதுகாறும் கூறியவாற்றால் ஒருவாறு உகரத்தின் பெருமையை உணர்ந்திருப்பீர்கள். இனி முருகு என்ற திருநாமத்தைச் சிந்தியுங்கள்.

மகர மெய்யில் உகர உயிர் ஏறி "மு"
ரகர மெய்யில் உகர உயிர் ஏறி "ரு"
ககர மெய்யில் உகர உயிர் ஏறி "கு"

"முருகு" என்ற மூன்றெழுத்துக்களிலும் காத்தற்குரிய உகரமே ஊடுருவி நின்று இம்முருக மந்திரமே அகில உலகங்களை காத்தருளும் திருநாமம் என உணர்த்துகின்றது.

இப்படி மூன்று உகர உயிர் அமைந்த வேறு மந்திரம் இல்லை என்பதும் ஒரு தலை. ஆதலால் முருகா என்று ஓதுவார் மும்மை நலங்களும் பெற்று உயர்வு பெறுவார்கள். ஒரு மன்னன் வேட்டையாடினான். விலங்கின் மீது விடுத்த கணை குறி தவறி ஒரு அந்தண முனிவரைக் கொன்றுவிட்டது. அதனால் பிரம்ம அத்தி தொடரப் பெற்ற மன்னன் பெருந்துயர் உழந்தான். இடர்களையும் சாதனத்தை நாடி கங்கைக் கரைக்கு வந்தான். கங்காநதி தீரத்தில் ஒரு மாதவ முனிவர் சிறந்த தவத்தில் இருந்தார். அரசன் அவரிடம் போனான். அரசன் வந்த சமயத்தில் ஆஸ்ரமத்தில் அருந்தவர் இல்லை. மாதவருடைய மைந்தன் இருந்தான். அச்சிறுவன் அரசனை வரவேற்று, "வேந்தே! எங்கு வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று வினாவினான்.

"குழந்தாய், உன் பிதா எங்கே?" "அரசே! அவர் வெளியே சென்றிருக்கின்றார். நின் மனதில் என்ன குறை? உன் வாட்டத்திற்குரிய காரணத்தைக்கூறு". "குழந்தாய்! நான் அபுத்தி பூர்வமாக் ஒரு முனிவரைக் கொன்றுவிட்டேன். பிரமகத்தி என்னைத் தொடர்ந்து வருத்துகின்றது. அது தீரும் சாதனத்தைக் கேட்க வந்தேன்". இவ்வளவு தானே? இதற்கென்ன பெரிய ஆலோசனை? நான் சொன்னபடி கேள். பிரமகத்தி தீரும். கங்கையில் நீராடு வடதிசை

நோக்கி நில் முருகவேளை மனக்கண்ணால் கண்டு, காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி, மூன்று முறை "முருகா" "முருகா" முருகா" என்று ஓது. பிரமகத்தி நீங்கும்" என்று அம்மைந்தன் கூறினான்.மன்னவன் அதுபடி ஓதி பிரமகத்தி நீங்கப் பெற்றான். முனி மகனை வணங்கி மகிழ்ச்சியுடன் சென்றான். பின்னர் முனிவர் பெருமான் வந்தார். தேரின் சக்கரங்கள் சுவட்டினைக் கண்டார்.

"மகனே! இங்கே யார் வந்தது?"

"அப்பா! இந்நாட்டினை ஆளும் வேந்தர் வந்தார்". "கண்ணே, எதன் பொருட்டு வந்தார்?"

"தந்தையே! பிரமகத்தி தீர வழி கேட்டார். அதற்கு நான் நீராடி உள்ளம் உருகி மும்முறை முருக மந்திரத்தைக் கூறுமாறு

உபதேசித்தேன். அவ்வண்ணமே செய்து அனுகூலம் அடைந்து அவர் அகன்றார்".

இதனைக் கேட்ட முனிவருக்கு விழி சிவந்தது. "மூடனே! நீ என் மகனா? என்ன காரியஞ் செய்தாய்? ஏன் உனக்கு இந்த மந்த புத்தி?

உனக்கு ஒருசிறிதும் முருக பக்தியில்லையே. பெருந் தவறு செய்துவிட்டாயே" என்று கூறிக் கடிந்தார்.

அம்மைந்தன் நடுநடுங்கினான். தந்தையின் தாள் மலர்மீது பலகாலும் வீழ்ந்து பணிந்தான். "அப்பா! நான் என்ன பிழை செய்தேன்?

நம் குலதெய்வம் குமாரக் கடவுளின் திருமந்திரத்தைத்தானே ஓதச் சொன்னேன்?"

"மகனே, ஒரு முறை "முருகா" என்றால் கோடி பிரமகத்திகள் தீருமே? நீ மூன்று முறை சொல்லச் சொன்னாயே. நீ முருக நாமத்தின் பெருமையையும் நன்மையையும் நன்கு உணரவில்லை. மூன்று முறை சொன்னால்தான் பிரமகத்தி நீங்குமா? அம்மந்திரத்தின் ஆற்றலையறிந்தாயில்லை. இதனால் நீ வேடர் குலத்தில் பிறப்பாயாக" என மகனை அவர் சபித்தார். மகன் பதைபதைத்துப் பணிந்து பிழை பொறுக்குமாறு வேண்டினான். முனிவர் கருணைபுரிந்து, "மகனே! அஞ்சற்க. நீ இதே கங்கா தீரத்தில் வேடர்கட்கு அரசனாக பிறப்பாய். முருகன் நாமங்களில் ஒன்றாகிய "குகன்" என்ற பெயரைத் தாங்கி, அன்புருவாக நிற்பாய். ஸ்ரீராமருக்கு நண்பனாய் வாழ்ந்து முடிவில் முருகபதம் பெறுவாய்" என்று அருள் புரிந்தார். அம்முனிவர் மகன் குகனாகப் பிறந்தான். உத்தமனாக நின்று ஸ்ரீ ராமபிரானுடைய நட்பைப் பெற்று, இறுதியில் கந்தலோகம் பெற்றான். ஆதலால், "முருகா" என்ற திருமந்திரம் சகல வினைகளையும் போக்கும்.

"முருகா" என்று ஒருமுறை கூறியவுடன் முருகம்மையாருக்குக் கணவன் வெட்டிய கரமலர் வளர்ந்தது.

"முருகா எனவோர் தரமோதடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே"

என்று அருணகிரிநாதர் பாடி இதன் பெருமையை உணர்த்துகின்றார்.

"முருகா எனவுனை ஓதுந்தவத்தினர் மூவுலகில்
அருகாத செல்வம் அடைவர், வியாதியடைந்து நையார்
ஒருகாலமுந் துன்பம் எய்தார், பரகதி உற்றிடுவார்
பொருகாலன் நாடுபுகார் சமராபுரிப் புண்ணியனே"

என்று சிதம்பர சுவாமிகள் திருப்போரூர்ச் சந்நிதி முறையில் பாடியிருக்கின்றார்.

ஆதலால் கண்கண்ட தெய்வமாம் கலியுகவரதன் என்னப்பன், மூவர் தேவர் தொழும் முழுமுதற் கடவுளின் திருவடியைச் சிந்தித்து, வந்தித்து, முருகா என்ற இனிய கனியமுதம் அன்ன நாமத்தை உள்ளம் உருகி, ஓதி, அன்பர்கள் பெற்ற பிறவியின் பயனைப் பெற்று, இனிப்பிறவாப் பெற்றியைப் பெறுவார்களாக.

முருகா! முருகா!! முருகா!!!

இறைபணியில்

முத்தமிழ் வித்தகர்
**சிவஸ்ரீ லம்போதரகுமாரசாமி குருக்கள்**
ஸ்ரீகல்பக விநாயகர் தேவஸ்தானம் வேல்ஸ்
ஸ்தாபகர், முதல்வர், பிரதம குரு

# சிந்தனைக்கினிய கந்தபுராணம்

**- நீர்வை. தி.மயூரகிரி சர்மா**

**சமஸ்கிருதத்தில் பதினெண் புராணங்கள் உள்ளன:**

சைவம், பவிஷ்யம், மார்க்கண்டேயம், லிங்கம், ஸ்காந்தம், வராஹம், வாமனம், மத்ஸயம், கூர்மம், பிரம்மாண்டம், காருடம், நாரதீயம், வைஷ்ணவம், பாகவதம், பிரம்மம், பத்மம், ஆக்னேயம், பிரம்மகைவர்த்தனம் என்பவற்றுள் ஸ்கந்தபுராணம் என்ற மஹாபுராணமும் ஒன்று.

"முருகப்பெருமானின் திருவரலாறாகிய கந்தபுராணத்தைக் காதலுடன் இப்புவியில் படிப்போர், கேட்போர், நினைப்போர் யாவரும் இந்திரனைப் போலத் தலைமைத்துவமும் இன்பமும் மிக்க வாழ்வை வாழ்ந்து இறுதியில் பரமானந்த நிலையாகிய சிவபதப் பேறும் பெறுவர்"

என்று நூற்பயனை விதந்து உரைக்கிறது இப்பாடல்:

"இந்திராகிப் பார் மேல் இன்பமுற்றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முத்தி சிவகதி அதனில் சேர்வர்
அந்திமில் அவுணர் தங்கள் அடல் கெடமுனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்தோதுவோரே"

பெருமை மிக்க இப்புராணத்திலுள்ள ஆறு பெரிய சங்கிதைகளுள் ஒன்று சங்கரசங்கிதை. இச்சங்கிதையிலுள்ள பதின்மூன்றாயிரம் ஸ்லோஹங்களால் ஆக்கப்பெற்றது சிவரஹஸ்ய காண்டம் என்ற உயர்ந்த பகுதி. இதில் ஏழு காண்டங்கள் உள்ளன. அவ்வேழு காண்டங்களுள் முதன்மையான ஆறு காண்டங்களை இணைத்து அழகுத் தமிழில் 'கந்தபுராணம்' என்ற ஞானக்களஞ்சியமாக தந்திருக்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

பொ.பி 12, 13ம் நூற்றாண்டுகளில், தமிழகத்தின் காஞ்சியில், குமரகோட்டம் முருகன் ஆலய அர்ச்சகராகத் திகழ்ந்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார். முருகனே 'திகட சக்கர' என்று முதல் அடியெடுத்துக் கொடுக்க 10345 அருந்தமிழ்ச் செய்யுள்களால் கந்தபுராணத்தை அவர் ஆக்கியிருக்கிறார். 'உபதேச ரத்னாகரம்' என்று போற்றப்படும் கந்தபுராணம் காப்பிய இலக்கணங்கள் மிக்கதாக, சித்தாந்தக் கருத்துக்களின் செறிவுடையதாக, தத்துவார்த்த உண்மைகள் பொருந்தப் பெற்றதாக அமைந்திருக்கிறது. தமிழ்க் கந்தபுராணத்தின் தமிழ் நடையும் வியந்து நயந்து உண்ண வேண்டியது.

முருகப்பெருமானாலேயே ஆணையிடப்பெற்று, அவனாலேயே தினமும் பரிசீலனை செய்யப்பெற்றது. ஆயினும், அரங்கேற்றத்தில் அறிஞர் முன்றலில் இலக்கணச் சந்தேகம் உண்டானது. அப்போது கந்தவேட் பெருமானே சிறுவடிவு தாங்கி வந்து, தன்னால் அங்கீகரிக்கப்பெற்ற நூல் அது என்று யாவரும் அறிய சந்தேகம் நீக்கினார். மிகத் தெளிவாக 'இறையாணை' பெற்ற நூல் கந்தபுராணம் என்பது சைவத்தமிழ் மக்களின் நம்பிக்கை.

**அரிய தத்துவப்புதையல்**

கந்த புராணம் ஒரு தத்துவப்புதையல். இப்புராணத்தின் ஒவ்வொரு நிலையிலும் இதனை உணர்ந்து அனுபவிக்க வேண்டும்.

கந்தன் இளமையின் வடிவம். ஆற்றலின் நிலையம். என்றும் இளையான், எவர்க்கும்

மிகப்பெரியான், என்றும் அழகியான் என்று சநாதன தர்மம் போலவே விளங்குபவன் அந்த ஸ்கந்தன் என்ற முருகன்.

அவனது மனைவியராகப் புராணம் இரு தேவியரைக் காட்டும். அவளுடைய வலது பக்கம் விளங்குபவள் வள்ளி. அவள் இச்சா சக்தி. மண்ணுலகில் பிறந்து வளர்ந்தவள். தமிழ்மகள். வேடுவனான நம்பிராஜன் புதல்வி. அத்தேவி இகலோக சுகத்தைத் தருவாள். அத்தேவியை முருகன் காந்தர்வ விவாகம் செய்து கொண்டான்.

முருகனின் இடது பக்கம் எழுந்தருளுபவள் தேவசேனா. விண்ணுலகில் பிறந்தவள். தேவராஜனின் புதல்வி. கிரியாசக்தி. அவளை இறைவன் கற்பு முறையில் பிரம்ம விவாகம் செய்தான். முருகனை வழிபடுவோருக்கு அத்தாய் பரலோக வாழ்வில் இடம்தருவாள்.

முருகனின் மூன்றாவது சக்தி வேல். முருகனின் கரத்தில் விளங்குகிறது. வெற்றியைத் தருவது. ஞானமே வடிவெடுத்த ஞானசக்தி அது.

'வெல்' என்ற வினையடியில் தோன்றியது 'வேல்'. அது ஞானமே உருவானது. ஆழந்து அகன்று கூர்மையாகி அறிவின் வெளிப்பாடாகத் திகழ்கின்றது. செவ்வேட் பெருமானின் திருக்கரத்தில் விளங்கும் சேவற்கொடி அஞ்ஞான இருளகற்றி ஞானஒளி வரக் கூவுகிறது. (கொக்கு- மாமரம், அற- அறுத்த, கோ- நம் அரசே) வாகனமான மயில் ஆசை என்ற பாம்பை அடக்கி பிரம்மசக்தியாக ஓம்கார ரூபமாக விளங்குகிறது.

முருகன் கைவேலுக்கு உரிய சிறப்பு வேறு எப்படைக்கும் இல்லை. தமிழ் இந்துக்களில் பலருக்கு 'வேலாயுதம்' என்றே பெயர் இருக்கிறது. இப்படி எவரும் வேறு எந்தப் படைக்கலனையும் தங்கள் பெயராகக் கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கையிலுள்ள பிரபல யாழ். நல்லூர் போன்ற பல முருகன் ஆலயங்களில் கருவறையில் முருகனின் திருவுருவத்திற்குப் பதிலாக வேலாயுதமே விளங்கிடக் காணலாம்.

'அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த அன்பால்
எந்தை கண்ணின்றும் வந்த இயற்கையால் சக்தியாம் பேர்
தந்திடும் பனுவல் சொன்ன தன்மையால் தனிவேற் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டு உளக்கவலை தீர்த்தோம்'

என்று தேவர்களின் வாக்காக வேலாயுதத்தைக் கந்தவேளாகவே கண்டு போற்றியதாகக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.

இறையருள் துணையுடன் ஆணின் விந்துவும் பெண்ணின் நாதமும் கலந்து குழந்தையாகிறது. (அருணகிரிநாதர் 'நாத விந்து கலாதீ நமோ நம' என்று இதனைத் திருப்புகழில் பாடுவார்.) இறைவனிடமிருந்து வந்த நாமெல்லோரும் இறுதியில் இறைவனையே சென்றடைய வேண்டும். அழிவின் பின்னர் சூரபத்மன் நாதவுருவாகச் சேவலாக மாறி இறைவனின் கொடியாகவும் விந்துருவுருவாக மயிலாக மாறி முருகனின் வாகனமாயும் மாறியது இதை வெளிப்படுத்துகின்றது என்பர். அவனையே அடைந்து அவனருளாலே அவன் தாள் வணங்குதலே முக்தி. இதனைப் பெற்றான் சூரன். இச்சம்பவத்தை 'சூரன் பெற்ற பேறு' என்று கொண்டாடுவார்கள்.

ஆன்மாக்கள் நல்லறிவை நாடித் தவிக்கும் போது இறைவனே குருவாக வந்து அருள்வான் என்பதை சிவனார் சனகாதி முனிவர்கள் நால்வருக்கு உபதேசித்தமை சுட்டுகிறது. சிவனார் காமனை எரித்ததும் காலனைக் காலால் உதைத்ததும் அவர் காமத்தையும் மரணத்தையும்

வென்றவர் என்பதையும், அவர் அடியார்களுக்கும் இவற்றால் துன்பமில்லை என்பதையும் உணர்த்தி நிற்கிறது. இறைவனை இகழ்ந்து அவனை அவமதிப்பவர்கள் மிகுந்த அல்லல்களை அநுபவிப்பர் என்பதை தக்கன் யாகத்தை இறைவன் அழித்தமை காட்டுகின்றது.

கந்தபுராணத்தில் தாரகன், சிங்கன், சூரபத்மன் என்ற மூன்று அசுரச் சகோதரர்களின் கதை கூறப்படுகின்றது. தாரகன் உலகமே உண்மை என்று வாழ்ந்தவன். சைவசித்தாந்த நிலையில் அவனை "மாயா மலத்திற்கு" உவமிப்பர். சிங்கன் கன்மத்திற்குக் கட்டுப்பட்டவன் அவனைக் "கன்ம மலத்திற்கு" உவமிப்பர். சூரபத்மன் "ஆணவ மலம்". இறுமாப்பே அவன் இயல்பு.

இம்மூவரையும் முறையே அழித்தமை ஞானம் எனும் வேல் கொண்ட வேந்தனால் மட்டுமே இயல்பாகச் செய்ய வல்ல பெருஞ்சிறப்பு.

'தன்னைத் தான் காதலாகில் எனைத் தோன்றும்
துன்னற்க தீவினைப் பால்'

என்பது வள்ளுவர் மொழி.

அதாவது 'நீ உன்னை விரும்பி, உனக்கு நன்மையை விரும்பி, தீவினை ஏதும் செய்யாமல் இருப்பாயாக' என்று அறிவுறுத்துகிறார். சூரனோ எல்லா விதத் திறனும் அறிவும் உடையவனாய் இருந்தும், இறையருள் பெற்றவனாய் இருந்தும், தீவினை செய்து தன்னைத் தானே அழித்துக் கொண்டமை வள்ளுவர் வாக்கிற்குத் தக்கச் சான்றாகும்.

**இயற்கையும் தெய்வமே**

மூவுலகிற்கும் முதல்வன் குழந்தையானான். தேவர்களின் வேண்டுகோளின் படி சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு தீப்பொறிகள் பிறந்து ஆகாயத்தில் தவழ்ந்து வாயுவாலும் அக்கினியாலும் தாங்கப் பெற்று ப்ருதிவியிலே 'சரவணப்பொய்கை' ஜலத்திலே குழந்தையாய் மாறியது என்று இப்புராணம் சொல்லுகிறது. இப்படிச் சொல்வது பஞ்சபூதங்களினூடாக இறையாட்சியை அவதானிக்கச் செய்கிறது. முருகனின் தோற்றத்தில் பஞ்சபூதங்களின் பங்களிப்பு வியக்க வைக்கிறது.

ஆலய கும்பாபிஷேகக் கிரியைகளில் ஆகாயச் சூரியனிலிருந்து 'சூரியாக்கினி' என்ற நெருப்புப் பெறப்படுகிறது. அந்த அக்கினி மண்ணில் உள்ள குண்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டு வாயுவின் துணையுடன் வளர்க்கப்பெறுகிறது பின், அதனை கும்பஜலத்தில் இணைத்து வழிபாடாற்றுவதுடன், இறுதியில் இறை திருவுருவத்தில் நீரால் அபிஷேகித்து இறைசாந்நதித்யம் உண்டாகப் பிரார்த்திக்கப்படுகிறது. இதைப் பஞ்சபூதங்கள் இணைந்து செயல்படும் நிகழ்வோடு இணைத்து நோக்கலாம். இந்த இடத்தில் 'ஒருதிரு முருகன் வந்து உதித்தனன்' என்று கச்சியப்பர் குறிப்பிடுவார். அதாவது என்றுமுள்ள இறைவன் இந்த வேளையில் முருகனாக உதித்தனன். (காலையில் சூரியன் பிறப்பதில்லை. உதிக்கிறான். ஏனெனில், அவன் முன்னரே இருப்பவன்.)

**போரும் சீரும்**

போருக்கு முன் இருமுறை தூதனுப்பியமை, மறைந்து நின்று போராடாமை, ஆயுதம் ஏந்தாதவனுடன் போராடாமை, தனக்குச் சமானமற்ற வீரனுடன் போராடாமை, புறங் கொடுப்பவனைக் கொல்லாமை ஆகிய செயற்பாடுகள் கந்தபுராணத்திலுள்ள போரில் 'அசுரர்களால் கூட' அநேகமாகக் கடைபிடிக்கப்படுவதைப் பார்க்கிறோம். செஞ்சோற்றுக்

கடனுக்குச் சிங்கனும், பிதிர்க்கடனுக்கு இரணியனும், மானத்திற்குச் சூரனும், கற்பிற்கு சூரன் மனைவியும் கந்தபுராணத்தில் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றனர்.

ஆனால், இன்றைய உலகில் நடைபெற்ற, நடைபெறும் மோதல்கள் இவற்றை எல்லாம் புறக்கணிக்கிறது. எந்தப் பிரச்சினையிலும் தலையிடாமல் ஒதுங்கி இருக்கிற மருத்துவமனையையும் தாக்குகின்றனர். இவையெல்லாம் நிச்சயமாக இன்றைய சமூகத்தைக் காட்டிலும் கந்தபுராண காலச் சமூகம் உள, ஒழுக்க ரீதியில் உயர்வானதாகவே இருந்திருக்கும் என நம்பச் செய்கின்றன. கந்தபுராணம் என்பது தமிழரின் வாழ்வோடு இணைந்தது. ஆக, இதில் ஊறிய எவரும் இதைக் கதை என்று சொல்வதில்லை. சிற்சில இடங்களில் கதைக்குரிய உயர்வு நவிற்சி இருந்தாலும், இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் உண்மையில் நடந்த சம்பவம் என்றே அவர்கள் நம்புகிறார்கள்.

இவ்வாறான ஆய்வுகளின் படி முருகன் பிறந்தது கைலாசச் சாரல் என்றும், தரை வழி யுத்தம் நடந்தது திருப்பரங்குன்றம் என்றும், விண் வெளி யுத்தம் நடந்தது திருப்போரூர் என்றும், கடல் வழிச் சமர் நடந்தது திருச்செந்தூருக்கு அப்பாலுள்ள கடல் என்றும் ஐதீகம். இலங்கையின் கதிர்காமத்தில் படைவீடு அமைத்துத் தங்கி, அப்பால் தெற்கே சூரனுடைய நகரை நோக்கிச் சென்றதாகக் கூறப்படுவதால் சூரன் அக்கால ஆப்பிரிக்கதேச அரசன் என்று கருதுவாரும் உள்ளனர். முருகனின் வலது புறம் எழுந்தருளியிருக்கும் வள்ளியம்மை தமிழ் மொழி பேசும் குறவர் இனப் பெண் என்பது வேறு ஐதீகம். இதுவும் ஆய்விற்குரியதே.

யாழ்ப்பாணத்தின் கடற்கரையோரத்தில் உள்ள பிரபல ஸ்கந்த ஸ்தலம் 'மாவிட்டபுரம்'. ஆக, திருச்செந்தூருக்கும் மாவிட்டபுரத்திற்கும் இடைப்பட்ட பரந்த சமுத்திரப் பகுதியில் மாமரமாகி மாயா ஜாலங்கள் செய்து முரகனுடன் சூரன் போராடியிருக்கிறான்.

'தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்'

என்ற கந்தபுராண அறைகூவல் எங்கள் ஒவ்வொருவரையும் தட்டி எழுப்பி "ஓ... அஞ்ஞானிகளே, கடந்த காலம் போயது. உங்கள் அறியாமை மூட்டைகளை நீக்க நல்ல ஒரு வழி கிடைத்திருக்கிறது. உடனடியாகக் கந்தப்பெருமானின் கழலடிகளைப் போய்ச் சேருங்கள். நீங்கள் ஞானியராவீர்கள்..." என்று நமக்கெல்லாம் அரிய பெரிய நற்செய்தி சொல்கிறது.

**காதல் முருகனைக் காதலி**

முருகு என்பது அழகு. ஆதன் மறு பெயர் அன்பு. அவன் பால் காதல் கொண்டோர் அனேகர். இறைவனின் இரு-பெண் திருமணம் சமூக சமத்துவத்தைக் காட்டி நிற்கிறது. தேவலோக அரசனின் மகளைத் திருமணம் செய்த அதே இறைவன், தானே வலிய வந்து மனிதர்களில், அதிலும் சாதி முதலிய வேறுபாடுகள் பாராமல் வேடுவர் குல மகளைத் திருமணம் செய்திருக்கிறான். இதை நம் புராணங்கள் மிகவும் தெளிவாகக் காட்டி வந்துள்ளன. இவை தவிர பூவுலகைச் சேர்ந்த வள்ளியம்மைக்குக் கொடுக்கப்படும் உயர்ந்த அந்தஸ்து தனிச்சிறப்பு. எவருமே 'முருகனுக்கு வள்ளி' என்றே கூறக் கேட்கிறோம்.

மேலும் வள்ளி தமிழ் மகள். இது தமிழுக்குக் கிடைத்த சிறப்பு.

".. ஒரு கோடி முத்தம் தெள்ளிக் கொழிக்கும் கடற் செந்தில் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய மாணிக்கமே"

என்று இதைப் பற்றி அருணகிரிப் பெருமான் உருகிப்பாடுகிறார்.

ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்விற்கு இந்துப்பண்பாடு கொடுத்த முதன்மையையும், காதற் சிறப்பையும், அன்னை உமையாளுக்கும் இறைவனுக்கும் நிகழ்ந்த திருமணமும் வெளிப்படுத்துகின்றது.

'கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'
என்ற ஞானசம்பந்தர் வாக்கு ஈண்டு சிந்திக்கத் தக்கது.

**சைவ-வைகூஷ்ணவ ஒற்றுமை**

கந்தபுராணக் கதையுடன் இராமாயணக் கதையை ஒப்பு நோக்கும் போது சைவ-வைஷ்ணவ ஒற்றுமையை உணரலாம். சைவசமயிகளின் பரம்பொருளான சிவபெருமானின் புதல்வன் முருகன். வைஷ்ணவர்களின் பரம்பொருளான விஷ்ணுவின் புதல்விகளாகவும் கொண்டாடப்பெறும் வள்ளி, தேவசேனா தேவியரைக் கல்யாணம் செய்தமை சமய ஒற்றுமை. தவிர முருகன் சிவகுமாரனே ஆகிலும் விஷ்ணு அம்சம் நிரம்பப் பெற்றவன். ஸ்ரீமந் நாராயணனின் அவதாரங்களில் நடைபெற்ற அத்புத நிகழ்ச்சிகளோடு அவனது ஒவ்வொரு செய்கையையும் இணைத்துப் பார்க்கும் போது ஏற்படும் இன்பமே தனியானது. அலாதியானது.

இதனை உண்மையிலேயே செயற்படுத்தியவர் சந்தக்கவி அருணகிரியார். திருப்புகழ் எங்கும் முருகன் பெருமை போலவே திருமால் பெருமையும் நிறைந்திருக்கிறது. தவிர, முருகனை அவர் 'பெருமாள்' என்றே விளித்துப் பெருமை செய்திருக்கிறார்.

'காலமாய்க் காலமின்றிக் கருமமாய் கருமமின்றி
கோலமாய்க் கோலமின்றி குணங்களாய் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி அநாதியாய் நங்கட்க்கு எல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண்டுற்றான்'

என்ற கச்சியப்ப சிவாச்சாரிய ஸ்வாமிகளின் திருவாக்கை மனங் கொண்டு அப்பெருமானின் திருவடிகளில் சரண்புகுவோம். முருகனுடைய ஆறுதிருமுகங்களும் அன்பு, அறிவு, ஆற்றல், அழகு, அமைதி, ஆளுமை ஆகிய பண்புகளை உணர்த்தும். நாற்றிசையும் மேலும் கீழும் ஆக, ஆறு பக்கங்களும் பார்த்து நிற்கும் இத்திருமுகங்களை நம்புவோருக்கு துன்பம் எத்திசையாலும் வாரா. அவனது கரங்கள் பன்னிரண்டும் கொடுப்பதற்கென்றே பிறந்தன. அதனை,

**"முழுமதி அன்ன ஆறுமுகங்களும் முன் நான்காகும்**

விழிகளில் அருளும் வேலும் வேறுள படையும் சீரும்
அழகிய கரம் ஈராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும்

**செழுமலரடியும்.."**

என்று தெவிட்டாத தேனாகத் தமிழில் பாடுவார் கச்சியப்பர்.

கந்தபுராண காவிய ரசனையை உளத்தில் கொள்வோம்.

செம்மொழியான செந்தமிழின் தலைவன் முருகன். அவனடி பணிவோம். தமிழ்ஹிந்து தர்மம் சிறக்கப் பிரார்த்திப்போம்.